413

413
2. 53.

1106

உ

கடவுள் துணை

# "ஜாதக சந்திர ஹோரை"

என்னும்

# "சந்திர கலா நாடி - தேவ கேரளம்"

(ஒன்றாவது பாகம் - First Part)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 MAY 1953
MADRAS

ஆசிரியர் :

ஜோதிர் பூஷணம்

C. G. ராஜன், B. A. (Mathematics)

(Retired Tahsildar & Taluk Magistrate)

All Rights Reserved

1953 விலை ரூ. 1—12—0

Δ: 864
N53

# ஜாதகம் எழுதிக்கொடுத்தல் விளம்பரம்

ஜாதகம் எழுதிக்கொடுத்தல் :— C. G. ராஜன் B. A., (Mathematics) அவரால் ஜாதக விஷயம் எழுதிக் கொடுக்கப்படும். (1) பலா பலன்கள் இல்லாமல் ஜாதகம் கணித்துக்கொடுக்க ஜாதகம் 1-க்கு சார்ஜ் ரூ. 10, (2) லக்கின ஸ்புடம் மாத்திரம் கணிக்க ரூ. 5. பாதி பணம் முந்தியாகவே அனுப்பவேணும். மீதி பணத்திற்கும் தபால் செலவிற்கும் வி. பி-யில் அனுப்பப்படும். 1. ஜாதகர் பிறந்த இடம் 2. தேதி, கிழமை 3. வேளை அதாவது மணி நிமிஷம், அல்லது நாழிகை விநாடி 4. ஆண் பெண், என்ற விவரம் இவைகள் நான்கையும் கிழமையும் மறக்காமல் தெரிவிக்கவும். பிறந்த இடம் சிறிய கிராமமானால் அதற்கு அடுத்த பெரிய கிராமம் அல்லது பட்டணத்தின் பெயரையும் திக்கையும் தூரத்தையும் தெரிவிக்கவும்.



தேவையான தேதி, முன் தேதி, பின் தேதி இந்த மூன்று தினங்களின் நவக்கிரக ஸ்புடம் தேவையானால் அதற்குச் சார்ஜி ரூ. 3-0-0 ஆகும். இவைகளிலிருந்து குறித்த மணி நிமிஷத்திற்கு ஜோதிடர்கள் கிரகஸ்புடம் திரைராசி கணிதம் பிரகாரம் தாமே கணித்துக்கொள்ளலாம். (இதன் தொடர்ச்சியை உள்பக்கம் பார்க்கவும்)

# முகவுரை

ஜாதக சந்திர ஹோரை என்று நம்மால் பெயரிடப்பட்ட இந்த ஜோதிட சாஸ்திரமாகிய "சந்திர கலா நாடி" அல்லது "தேவ கேரளம்" அச்சுதன் என்ற ஒரு பெரிய ஜோதிட பண்டிதரால் வரப்பிரசாதத்தால் செய்யப்பட்ட ஜோதிட சாஸ்திரத்தின் அரியபெரிய விஷயங்கள் அடங்கிய சாஸ்திரமாகும். ஜோதிட சாஸ்திரம் மிகவும் புராதீனமான ஒரு விசேஷ சாஸ்திரமாகும். இதை உண்டு பண்ணி கையாண்டு வந்தவர்கள் பதினெட்டு ரிஷிகளும் அவர்களுக்குப் பின்னல் வந்த அனேக பெரிய வித்வான்களுமாகும். அந்த ரிஷிகள் (1) சூரியன், (2) பிதாமகன், (3) வியாசர், (4) வசிஷ்டர், (5) அத்திரி, (6) பராசரர், (7) கஸ்யபர், (8) நாரதர், (9) கர்கர், (10) மரீசி, (11) மனு, (12) அங்கீரசர், (13) லோமசர், (14) புலிசர், (15) சயனர், (16) யசனர், (17) இரண்டாவது மனு, (18) சௌனகர் ஆவர். இவர்களுக்குப் பின்னல் வந்த பெரிய வித்வ சிரோமணிகளில் விஷ்ணு குப்த்தர், மயன், மணித்தர், சத்தியாச்சாரியார், வராஹமிகிரர் முதலியவர்களாவர். மேற் சொல்லிய ரிஷிகளால் செய்யப்பட்ட ஜோதிட கிரந்தங்களுக்குச் "ஸம்ஹிதை" என்றும் "ஹோரை" என்றும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளில் பெரும்பாலும் பல கிரந்தங்

கள் நாளடையில் சிதருண்டு போய் பூராகவும் இப்போது கிடைப்பது மிகவும் அரிதாக விருக்கின்றது. இவர்களுக்குப் பின்னல் வந்த ஜோதிட பண்டிதர்கள் இவர்களுடைய கிரந்தங்களில் தமக்குக் கிடைத்தவைகளை நன்ருய்ப் படித்து ஆராய்ந்து பரிசிலனை செய்து இவைகளின் சாராம்சத்தை எடுத்து மேற்கோளாக அல்லது ஆதாரங்களாக உபயோகப் படுத்திப் பல கிரந்தங்களைச் செய்திருக்கின்ருர்கள். இவ்விதமாகச் செய்தவர்களில் அச்சுதன் என்ற பெரிய ஜோதிட பண்டிதர் ஒருவர் ஆவார். இவருடைய விஸ்தாரத்தை இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் விவரமாகச் சொல்லி இருக்கின்றதை வாசிக்கவும்.

இந்தச் சந்திர ஹோரையில் கிரந்தகர்த்தர் சில விடங்களில் ஜோதிட சாஸ்திரத்தின் பொது விதிகளை வரிசையாகவும் ஒன்றன் பின் ஒன்ருகத் தொடர்ச்சியாகவும் கொடுத்திருக்கின்ருர். இதுவுமல்லாமல் அவர் சில ஜாதகங்களை எடுத்துக்கொண்டு அவைகளுக்குப் பலா பலன்களை விஸ்தாரமாகத் தெசாபுக்தி பலன்களுடன் சொல்லி அப் பலா பலன்களுக்குக் காரணமாகப் பல விடங்களில் தன்னுடைய முன்னேர்களையும், அவர்களுடைய ஜோதிட சாஸ்திரத்திலுள்ள பொது விதிகளையும் மேற்கோள்களாகவும் ஆதார வசனங்களாகவும் கொடுத்திருக்கின்ருர். (1) கர்க்க ஹோரை, (2) விருத்த பராசர ஹோரை, (3) வியாச ஹோரை, (4) வசிஷ்ட ஹோரை, (5) சுக்கிர ஹோரை, (6) மனு ஜாதகம், (7) நாரதீயம், (8) காசியபர் ஹோரை முதலியவைகளையும்,

(9) நவநாடிகளாகிய (1) சூரிய நாடி. (2) சந்திர நாடி, (3) குஜநாடி, (4) புதநாடி, (5) குருநாடி, (6) சுக்கிரநாடி, (7) சனி நாடி, (8) இராகுநாடி, (9) கேதுநாடி இவைகளில் பலவற்றையும் (10) யவனரையம், (11) இந்திரனையும் தனக்குமேற் கோள்களாகவும் ஆதாரமாகவும் ஜாதகப் பலா பலன்களைச் சொல்லும்போது அடிக்கடி எடுத்துக் காட்டி இருக்கின்றார். மேலும் இவர் சாதாரண உடு தெசை, காலச்சக்கிரதெசை கோச்சாரம் அம்சாயுர் தாயம் பாவ ஆரூடாதிபதிகள் ஆகிய இவைகளையும் தான் பலா பலன்களைச் சொல்லும்போது உபயோ கப் படுத்தி இருக்கின்றார். பலாபலன்கள் நடக்கும் காலங்களை நிர்ணயிக்கும்போது கோச்சாரத்தையும் (அதாவது சனி, குரு, இவர்களுடைய தற்கால, கோச் சார நிலைமையைப் பெரும்பாண்மையாகவும்) உபயோ கப்படுத்துகின்றார். இவர் உபயோகப்படுத்தியுள்ள பல ரிஷிகளுடைய பல ஜோதிடப் பண்டிதர்களுடைய ஜாதக விதிகளை எல்லாம் திரட்டி அவைகள் இந்தச் சந்திர கலா நாடியில் ஆங்காங்கு வருகின்ற கிரமப்படி இந்தச் சந்திர ஹோரையின் ஓராம் பாகத் தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளை இந்தப் புத்தகத்தின் அட்டவணையில் கூடிய மட்டும் எந்த எந்த விஷயங்கள் வரிசையாகவும் தொடர்ச்சியாக வும் சௌகரியத்திற்காகக் குறிக்கப்படக்கூடுமோ அவைகளை அவ்விதமாகக் குறித்து இருக்கின்றோம்.

மேலும் இந்தச் சந்திரகலாநாடியின் கிரந்தகர்த்தர் கிரகங்கள் துவாதசப் பாவங்களில் தனியாகவும், கூட்டக் கிரகங்களாகவும் இருப்பதாலும், ஒருவரை ஒருவர் பார்ப்பதாலும் சம்மந்தப்படுவதாலும், ஒருவ ருடைய ஸ்தானத்திலிருந்து மற்றொருவர் இருக்கும்

ஸ்தானத்தாலும், தெசா புக்திகளாலும், காலச் சக்கிர தெசா புத்திகளாலும் ஏற்படக்கூடிய துவாதச பாவ பலா பலன்களையும் விஸ்தாரமாகக் காரணங்களுடன் இந்தச் சந்திரா கலாநாடியில் தனித் தனியான ஜாதகங்களுடைய பலா பலன்களைச் சொல்லும்போது கொடுத்திருக்கின்றார். அவைகளை ஜென்ம லக்கின ரீதியாய் ஒன்றாகத் திரட்டி மேஷ லக்கின ஜாதகம் முதல் மீன லக்கின ஜாதகம் வரையில் வரிசைக் கிரமமாக "ஜாதக சந்திர ஹோரையின்" இரண்டாவது பாகத்தில் கொடுக்கப்படும்.

இந்த ஓராம் பாகத்தில்: அடிக்கடி சனி, குரு இவர்களுடைய தற்காலிக கோச்சார நிலையை உபயோகப்படுத்துவதால் இந்தக் கிரகங்களின் இனி வரப்போகின்ற "தற்காலிக கோச்சார ஸ்புடங்களை" மாத்திரமே சுமார் 30, 24, வருஷங்களுக்கு இந்தப்புத்தகத்தின் நிமித்தமாகவே 1-வது அனுபந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் புத்தகத்தில் எழுத்துப் பிழை சொற்பிழை முதலியவைகளிலிருந்தால் அவைகளை மன்னித்து இதிலுள்ள சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு இந்தப் புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும் பெரியோர்களையும் சிறியோர்களையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

15-8-1952 சென்னை

C. G. ராஜன் B. A., (Mathematics)
என்னும்
C. கோவிந்த ராஜன் B. A.,

உ

# " ஜாதக சந்திர ஹோரை "

என்னும்

# " சந்திர கலாநாடி - தேவ கேரளம் "

( ஒராவது பாகம் - First Part )

திரட்டிச் சேகரிக்கப்பட்ட

# பொது வீதிகள்

# (General Dogmas)

ஸ்ரீ மகாலக்ஷிமியுடன் கூடியவரும் மேலான பரம்பொருளும் நோயில்லாதவரும், அனமய மாயிருப்பவரும் வசுதேவரின் புத்திரராயும் வாசுதேவன் என்கிற பெயருடையவருமான ஸ்ரீமந் நாராயணனை நான் நமஸ்கரித்து தேவ கேரளம் என்கிற (சந்திரா கலாநாடி) கிரந்தத்தைச் சொல்லுகிறேன்.

கேரள விஷயமாக அச்சுதன் என்கிற ஒரு பிராமணர் தேவ குருவான பிரஹஸ்பதியைக் குறித்து உத்தமமான தபசினல் ஆராதித்தார். அதனல் தேவர்களின் புரோகிதரான குருவானவர் மேற்படி அச்சுதருக்கு நேர் முகமாகவிருந்து "ஹே குழந்தையே உன் தபசி

ஞல் நாம் மெத்தச்சந்தோஷம் அடைந்தோம், உனக்கு என்ன வேண்டும் என்றாலும் செய்கிறோம் என்று அனுக்கிரகஞ் செய்தார்.

வார்த்தைகளுக்கு அதிபதியாகியும் ரிஷிகளெல்லாம் வணங்குபவரும், கிரகங்களுக்கு அதிபதியாயிருப்பவரும் ஸர்வேசனுயு மிருப்பவருமான அவரை நமஸ்கரித்து உங்களுடைய அனுக்கிரக பாக்கியத்தினுல் நான் சந்தோஷம் அடைகின்றேன், என்பொருட்டாக நடந்ததும், நடக்கப்பொகிறதுமான பலனை எது உபதேசம் செய்கிறதோ அதுவாகிய ஜோதிட சாஸ்திரத்தை எனக்கு அனுக்கிரகிக்கவேண்டும் என்று அச்சுதன் கோரினதற்குத் தேவ குருவானவர் என்னுல் உண்டாக்கப்பட்டதை என் மனதில் உள்ளதை எப்படிச் செய்யவேண்டிய திருந்ததோ அதன்படி உன்னுல் பிரார்த்திக்கப்பட்டபடியால், ஹே, குழந்தையே நீயே இதை என் பொருட்டாகச் செய்வாயாக என்று ஆசீர்வதித்தார்.

முன்பு ஸ்ரீமந் நாராயணனுனவர் தேவர் பிரம்மா இவர்கள் யாசித்ததின் பேரில் நான்கு லக்ஷம் கிரந்தங்களாக இந்த ஜோதிஷக் கிரந்தத்தைச்செய்தார். ஸனகாதி முனிவர்கள் தமக்குச்சுயமாகப் பிரம்ம தேவனுர் உபதேசிக்கப்பட்ட இந்தக்கிரந்தத்தின் சாரத்தை எடுத்து மறுபடியும் ஸம்ஹிதைகளாகச்செய்தார்கள். மேலும் இந்திரனுல் ஆதரவுடன் முதலில் பிராத்திக்கப் பட்டதை குருமதம் என்கிற பெயருடன் பதினுயிரம் கிரந்தங்களாக விருஷபர்வத்தில் சுக்கிரபகவானுல் கிருபையுடன் செய்யப்பட்டது. பார்வதி தேவியுடன் கூடிய சிவபெருமான் பதினுயிரங் கிரந்தங்களைச் செய்தார். என்னுல் முதலில் ஜாதக ஸ்கந்தம் என்று உத்தமமாக நன்றாகச் செய்யப்பட்டது. அதை நீ

சுருக்கமாக இரண்டாயிரம் கிரந்தமாகச் செய்வாய் என்று ஆக்ஞாபித்துத் தன் மதத்தைக் குருபகவான் அச்சுதனுக்கு உபதேசித்தார். மனு, பார்க்கவர், முத லானவர்களும் சொல்லியுள்ளதையும் சேர்த்து அவர் உபதேசித்தார். ஆயினும் மறுபடியும் பிரீதியுடன் அச்சுதனுனவர் தபசினுல் பார்க்கவரைப் பூஜித்து அவரிடமிருந்து பார்க்கவமதம் என்று சொல்லப் பட்ட ஆயிரக்கணக்கான கிரந்தங்களையும் அத் துடன் ஸ்ரீசங்கர பகவானை ஆராதித்து அவரிட மிருந்து சாம்ப சிவமதம் என்று வழங்கப்பட்ட சுருக்கமான ஆயிரக்கிரந்தங்களையும் சந்திரரைத் தபசினுல் பூஜித்து அவர் அருளினுல் நிச்சயமாகப் பதினுயிரம் கிரந்தங்களையும் ஸனகாதி மகரிஷிகளால் ஸம்ஹிதையாக மறுபடியும் செய்யப்பட்டதையும் அடைந்து, கிரகமாக அவரவர்களுடைய அனுக்கிரகங்க ளாலும் முன்தேவர்களால் கொடுக்கப்பட்ட வரத்தினு லும் எல்லாம் சந்திர பகவானுடைய கலையினுல் சாஸ்திரம் எல்லா வற்றையும் எடுத்துச் சந்திரனுடைய அனுக்கிரகத்தினுல் லோகத்திற்கு உபகாரமாக கேரள கிரந்த ரூபமாகச் செய்யப்பட்ட காரியங்களால் மேற் படி அச்சுதன் என்பவர் சந்தோஷத்துடன் தன் வீட்டை அடைந்து தேவ கேரளம் என்னும் மேற்படி கிரந்தத்தைத்தன் சிஷ்யர்களுக்கு அத்தியயனம் செய் வித்தார். ஆதலால் பல விதங்களாக முன்னோர்கள் செய்ததைத் தேவாம்சங்களாகிற பலவித அம்சங்க ளால் வந்ததும் (நடந்ததும்), வரப்போகிறதுமான (நடக்கப்போகிறதுமான) பலனை உபதேசிக்கிற இவற்றை உத்தமமான பிரீதியுடன் குரு முகமாக நன்ருய் அத்தியயனம் செய்யவேண்டியது.

## நவக்கிரக ஆதிபத்தியம்

சூரியன் :—நாற்சதுர உருவம், க்ஷத்திரியகுலம், மத்தியானத்திற்கதிபதி, உக்கிர சுபாவம் உடையவர் சொர்ணவர்ணம், கிழக்கு திக்கு, நாற்கால், பித்தசரீரம், பகலில் வலிவுடையவர், ஆவார்.

சந்திரன் :—இரவில் பல முள்ளவர், வைசிய குலம், யவ்வனம், பார்வதி தேவதை, ஜலமுள்ளவிடம், வட்டவடிவம், வெளுப்புநிறம் வாயு திக்கு, பெண், தபஸ்வி, பரான்னம், சிலேஷ்மம், ஜலம், மெல்லிய சரீரம், பிராக்ஞுத்துவம், மெதுவாய்ப் பேசுதல், அழகிய கண், ஆகிய இவைகள் ஆகும்.

செவ்வாய் :—குரூரம், மத்தியான்னம், தென் திசை, க்ஷத்திரியர், சொர்ணம், பொசுக்கப்பட்ட ஆடை பூமி, சிவந்த கோபமுள்ள கண்கள், மெல்லிய நீண்டரூபம்.

புதன் :—சுபர், பச்சை, நீலம், சிரத்தை, வாத பித்த சிலேத்ம முக்குணமும், கட்கம் ஆயுதம், சர்வ ரசப்பிரியர், சூத்திர குலம், விளையாடுமிடம், விஷ்ணு தேவதை, ஆகிய இவைகள் ஆகும்.

குரு :—சுபர், பிராமணர், சுபம், பிரீதி, யாசனை, புத்தி தேவாலயம், சமதாது. மத்திய வயது, ஆகிய இவைகள் ஆகும்.

சுக்கிரன் :—சுப பலனுள்ளவர், ராஜஸ்திரீ ரூபம், ஸரசம் ஸ்திரீ, பிராமணர், பரான்னம், அக்கினி திக்கு, இந்திராணி தேவதை, அழகிய கண்கள், மத்தியானத்தில் வலிவுள்ளவர், ஜலம், மத்திமவயது, ஆகிய இவைகள் ஆகும்.

சனி :—சூத்திர ஸ்திரீ சேர்க்கை, வசியம், சந்தியா காலத்தில் வலிவு, குரூர விருத்தி, நிலேயில்லாத சித்தம், வயது முதிர்ந்த தன்மை, ஸ்தூலத்துவம், கெட்ட ஒழுக்கம் ஆகிய இவைகள் ஆகும்.

ராகு :—அர்த்த சிரசு, பாம்பு, ஜன நாயகம், ஆகிய இவைகள் ஆகும் இங்கு கேதுவுக்கு ஆதிபத்தியம் சொல்லப்படவில்லே.

இந்தக் கிரந்தத்தில் ஆங்காங்கு கொடுத்துள்ள விதிகளேத் திரட்டி ஒன்ருகச் சேர்த்து அதில் வருகின்ற கிரமப்படி கீழே கொடுக்கப்பட்ட.

## பொது விதிகள்

(1) மத்த மாதங்க யோகம் :—கேந்திராதிபதிகள், திரிகோணுதிபதிகள் இவர்கள் தங்கள் ராசியிலிருந்து, லக்கிஞதிபதி கேந்திரத்திலாகிலும் திரிகோணத்திலாகிலும் அல்லது தன் உச்சத்திலாகிலும் இருப்பது மத்த மாதங்க யோகமாகும். ஜாதகர் தன் தேசத்திலும் வெளி தேசத்திலும் கீர்த்தி யுள்ளவர், பெரிய சேனே, குதிரை, யானே, பல்லக்கு முதலியவை உடையவர், அன்னதானம் செய்பவர் ஆவார், லக்கிஞதிபதி ஆருமிடத்தில் அல்லது நீச்சத்திலிருந்தால் ஜாதகருக்கு ராஜயோகம் நாசமாகி அதனுல் அவர் பதினுயிரத்திற்கு மேற்பட்டதனம் மாத்திரம் சம்பாதிப்பார்.

(2) மாளவிய யோகம் :—சுக்கிரன் தன் உச்சத்தில் அல்லது சுவக்ஷேத்திரத்தில் இருப்பது. ஜாதகர் பெரிய யோகத்தை அடைவார், யானே, குதிரை உடையவர், பூமி, துர்க்கம், நகரம், இவைகளுக்கு நாதன், கூட்டத்திற்கும், சமுத்திரத்திற்கும் அதிபதி, நல்ல மனேவியுடையவர், ஜனங்களுக்குத்தலேவர், எப்போதும் போக சாலியாய் இருப்பார்.

இந்த மாளவிய யோகத்தில் குரு, சனி கூடியிருந்தாலும் குருவைச்சனி பார்த்தாலும், சுக்கிரனுடன் கேது கூடியிருந்தாலும் மாளவிய யோகம் உண்டாகாது, சுக்கிரன் நல்ல பலனைக்கொடுக்க மாட்டார், ஜாதகர் வீட்டுக்கஷ்டங்கள் முதலிய வற்றால் துக்கத்தை அடைவார்.

(3) எல்லாக் கிரகங்களும் தம் உச்ச ராசியிலிருந்து அம்சத்தில் நீச்சராசியிலிருந்தால் ஜாதகர் பெரிய கடலுக்கும் பூமிக்கும் அரசராயிருந்தாலுங்கூட முக்கியமான திகம்பரனாகவும் பிச்சான்னம் உண்பவராகவும் ஆவார், துக்கியாயிருப்பார்.

(4) கிரகங்கள் தங்களுடைய நீச்ச ராசியில் இருந்து உச்சாம்சத்திலிருந்தால் ஜாதகர் சுகியாய் இருப்பார்.

(5) கிரகங்கள் தங்களுடைய அம்சத்திலும் வர்க்கோத்த மாம்சத்திலும் இருந்தால் ஜாதகர் சௌக்கியத்தையும் ராஜயோகத்தையும் அடைவார்.

(6) நீச்ச ராசியில் மூன்று கிரகங்கள் அல்லது இரண்டு கிரகங்கள் இருந்தால் ஜாதகர் எப்போதும் ஜீவனத்திற்குக் கிலேசமுடையவராக இருப்பார். இக்கிரகங்கள் இப்படி நீச்சமாயிருக்கும்போது நீச்சாம்சத்திலிருந்தால் கெட்டபலன்கள் அதிகப்பட்டுவிடும், (ஆனால் உச்சாம்சத்தில் இருந்தால் கெட்டபலன் நேரிடாது.)

(7) மூன்று கிரகங்கள் சுவக்ஷேத்திரத்திலிருந்து நல்ல ஸ்தானங்களில் இருந்தால் ஜாதகர் சுகத்தையும் சுக ஜீவனத்தையும், கெட்ட ஸ்தானங்களிலிருந்தால் அசுகத்தையும் ஜீவன கிலேசத்தையும் அடைவார்.

(8) இரண்டு கிரகங்கள் சுவ க்ஷேத்திரத்திலிருந்து நல்ல ஸ்தானங்களிலிருந்தால் ஜாதகர் இராஜ யோக முடையவராவார்.

(9) சந்திரனுக்கு ஆறு, ஏழு, எட்டு இந்தப் பாவங் களில் சுபக்கிரகங்கள் இருந்தால் (சந்திராதி) அதி யோகம் உண்டாகும். ஜாதகர் அரசனுக்குச் சமான மானவர், நல்ல யோக போக முடையவர், யானை வரை யிலுமுள்ள லக்ஷிமிகரமான பாக்கியத்துடன் கூடி யிருப்பார், சேனுதிபதியாகவும் இருப்பார், தீர்க்காயுளு டையவர், ரோக பயமில்லாதவராவார்.

இந்த அதியோகத்தில் பிறந்தவருக்குக் கிரகங்கள் நீச்சாம்சத்தில் இருந்த போதிலும் பூர்ண கலாம்ச பாகத்திலிருந்தால் மேற்சொல்லிய நல்ல பலன்களே நடக்கும்.

(10) சுபக் கிரகங்கள் லக்கினத்திற்கு ஆறு, ஏழு, எட்டு இந்த பாவங்களிலிருந்தால் (லக்கினுதி) அதியோகம் உண்டாகும். இதற்கும் சந்திராதி அதி யோகத்திற்குச் சொன்ன பலன்களே நடக்கும்.

(11) சந்திராதி அதியோகம் அல்லது லக்கினுதி அதியோகம் இருக்கும்போது ஐந்தாவது பாவத்தில் அல்லது அதன் திரிகோண பாவங்களில் (அதாவது ஐந்து, ஒன்பது, ஒராவது பாவங்களில்) சுபராவது அசுபராவது இருந்தால் இந்த அதியோகம் ஏற்படுவ தில்லை அதாவது இந்த அதியோகம் நாசத்தை அடை ந்து விடுவதால் அதனுல் ஏற்பட வேண்டிய நல்லயோக பலன்கள் உண்டாவதில்லை.

(12) சந்திராதி அதியோகத்தில் சனியையும், லக்கி னுதி அதியோகத்தில் குருவையும் நன்ருய் பரி

சிலனைசெய்து அவர்களுடைய நிலையை அனுசரித்து ஜாதகருக்குத் தைரியத்தையும், சமூகத்தையும், அரசயோகத்தையும் விசேஷமான போகத்தையும் நிர்ணயிக்கவேணும்.

(13) சந்திராதி அதியோகத்தில் சந்திரனுக்கு ஏழில் சூரியன் இருந்தால் ஜாதகருக்கு மத்திம ஆயுளாகும். ஜாதகர் புத்திமானுகவும் வெகு புத்திரருடையவராகவும் இருப்பார்.

(14) லக்கினுதி அதியோகத்தில் பிறந்தவருக்குச் சந்திரன் பாபருடன் கூடியிருந்தாலும் ஜாதகருக்கு ராஜயோகம் உண்டாகும், ஆனல் அவருக்கு ஆயுள் மாத்திரம் அற்பாயுளாகும்.

(15) சனி தன் வர்க்கத்தில் யோகாம்சத்தில் சுக்கிரனுடன்கூடி பலமுடையவராயிருந்தால் ஜாதகர் சம்பத்தும். அழகும் உடையவர், தனத்தைச் சம்பாதிப்பார், நல்ல புத்தியும், கீர்த்தியும் உடையவர், காமமுடையவர், எப்போதும் ராஜகாரியத்தில் சமர்த்தராயிருப்பார்.

(16) சனி வர்க்கோத்த மாம்சத்தில் சுபக்கிரகத்துடன் கூடி ராஜ்யாவஸ்தையிலிருந்தால் ஜாதகர் ராஜயோகத்தை அடைவார்.

(17) பாபக்கிரகங்கள் நீச்சத்திலிருந்து சுபக்கிரகங்கள் பல முள்ளவர்களாயிருந்தாலும் அல்லது கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், அல்லது ஒன்பது பத்தாமிடங்களிலிருந்தாலும் ஜாதகர் அரசராவார், அதிக பூமியுடையவர், வெகு பல முடையவர், கொண்டாடப்பட்ட உயர்ந்த கீர்த்தியுடையவர், தீர்க்காயுளுள்ளவர்.

(18) லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் பாபரிருந்து இந்த ஐந்தாமாதிபதி பாபருடன் கூடியிருந்தாலும் எட்டாமிடத்தில் இருந்தாலும் ஜாதகருக்குப் புத்திரனில்லை.

(19) ஐந்தாமிடத்திற்குடையவர் நின்ற ராசி அதிபதி பலமுடையவராகி எங்கு இருந்தாலும் ஜாதகர் புத்திருருடையவர். பலமுடையவர், தனதான்ய முடையவர், அரசாங்கத்தில் பிரசித்தி அடைபவர்.

(20) ஐந்தாம்பாவாதிபதி தன் உச்சராசியில் அல்லது தன் நீச்சராசியில் தன் நவாம்சத்திலிருந்தாலும் சுய க்ஷேத்திரத்தில் இருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும், அல்லது (அம்சத்தில் நீச்சராசியிலிருந்து) ஐந்தாவது ஸ்தானத்திலேயே இருந்தாலும் ஜாதகருக்கு இராஜயோகமுண்டாகி அவர் அரசனுகவாவது அல்லது அரசனுக்குச் சமானமாகவாவது இருப்பார்.

(24) சாமர யோகம் :—ஒன்பதாம் பாவாதிபதிதன் உச்சத்தில் நான்காம் பாவாதிபதியுடன் கூடியிருந்து, லக்கினத்திற்கு ஐந்தில் சுக்கிரன் இருந்தால் சாமரம் என்ற யோக முண்டாகும். மேஷ லக்கினத்தில் சாமர யோகத்தில் பிறந்தவர் நல்ல பாக்கியத்தை அடைவார், பதினாறு வயதிற்குமேல் நல்ல பாக்கியமும் விசேஷ சுகமுமுண்டாகும், அரசனுகவாவது அல்லது அரசனுக்குச் சமானமான தனமுடையவராகவாவது ஜாதகர் ஆவார்.

(25) கடக லக்கின ஜாதகத்தில் அல்லது மேஷ லக்கின ஜாதகத்தில் சாமர யோகத்தில் சுக்கிரன் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் ஜாதகருக்கு ராஜயோகமுண்டாகும். அதில் பாதியில் அபமிருத்து ஏற்படும், ஜீவித்திருப்பின் தீர்க்காயுளுண்டாகும்.

(26) மீனராசியின் திரிகோணத்தில் குரு சந்திரனுடன் கூடியிருந்தாலும், சந்திரனைக் குரு பார்த்தாலும் ஜாதகர் பதினாறு வயதிற்குமேல் சுகத்தை அடைவார் (இது மீன லக்கின ஜாதகத்திற்குப் பொருந்தும்).

(27) லக்கினாரூடத்தைச் சுக்கிரன் பார்த்தாலும் அல்லது அதில் இருந்தாலும் ஜாதகர் யோகமும் கீர்த்தியும் அடைவார்.

(28) பாக்கியாரூடத்தில் சுக்கிரன் இருந்தாலும் அல்லது அதைப்பார்த்தாலும் ஜாதருக்குக் கீர்த்தியும் யோகமும் உண்டாகும்.

(29) (லக்கின) ஆரூட, லாபராசிகளைப்பலமுள்ள சுக்கிரன்பார்த்தாலும் அவைகளில் சுக்கிரன் இருந்தாலும் அப்போதும் சுக்கிரன் யோகாம்சத்தில் இருந்தால் ஜாதகர் நல்ல வாகன முடையவர், சேனைக்கு அதிபதியாகி நல்லயோக முடையவராவார்.

(30) வலிவுள்ள சுக்கிரன் சந்திரனைக்கூடி லக்கினத்திலிருந்து சுக்கிரன் யோகாம்சத்தில் இருந்தால் ஜாதகர் நல்ல வாகனமும் யோகமுமுடையவர், சேனைக்கு அதிபதியாயுமிருப்பார்.

## லக்ஷிமி யோகம்

(31) (1) ஜாதகருடைய ஜென்ம நட்சத்திராதிபதி தன்னுடைய உச்சத்தி லிருந்தாலும்.

(2) லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் புதனிருந்து ஆறும் பாவத்தில் சூரியன் இருந்தாலும்

(3) குருவும் சுக்கிரனும் லக்கினத்திலிருந்து செவ்வாயும் சனியும் மூன்றும் பாவத்திலிருந்தாலும்

லக்ஷிமியோகம் ஜாதகருக்கு உண்டாகிறது. அவர் அதனால்அரசராகிச் சந்திரனைப்போன்ற ஒளியான கீர்த்தியுடையவராகி சத்திர சாம்ராதிகளுடன் கூடிய ராஜ்ய லக்ஷிமியை அடைவார், பூமியை ஆளுவார். வித்வானுவார், ராஜஸ்திரீகளிடத்திலே எப்போதும் பிரீதியுடையவர், வீட்டில் லக்ஷிமிகடாக்ஷ முடையவர், இருபத்தைந்து வயதிற்குமேல் பாக்கியமும், முப்பது வயதுக்குமேல் அதிக பாக்கியமும் அதிக சம்பத்தும் அடைந்து போகியாயும், (பதினாறு வருஷம் தொடர்ந்தாப்போல யோகம் அடைந்து யோகத்தின் முடிவில் யுத்தத்தில் தோபத்தை அடைந்து அபமிருத்து அடைவார். தப்பிப்பிழைத்தால் சௌக்கியத்தையும் அரோகதிட காத்திரத்தையும் அடைந்து, எழுபத்தோரு வயது வரையிலும் ஜீவித்திருப்பார், அறுபத்தோரு வயது சமயத்தில் எப்போதும் காலமிருத்து பயம் உண்டாகும்.

(32) இரண்டு, ஒன்பது, பதினொன்று இந்தபாவாதிபதிகளில் ஒருவர் சந்திர கேந்திரத்திலிருந்து, குரு இரண்டு, ஐந்து, பதினொன்றுக்குடையவராக ஏற்பட்டால் ஜாதகர் அகண்ட பூமண்டலாதிபதியாவர் (இது ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், இந்த லக்கினங்களுக்கும் பொருந்தும்.)

(33) நான்கு ஸ்திரராசிகளில் (அதாவது ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இவைகளில், பிறந்தவருக்கு லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் பாபரிருந்து சந்திர லக்கினத்திற்கு எட்டு, பன்னிரண்டாமிடத்திலும் பாபரிருந்தால் ஜாதகருக்கு ராஜயோக பங்க முண்டாகும். ஜீவனத்திற்குத் துக்கப்படுவார். ஜாதகர் துராத்துமாவார். இவருக்குக் கொஞ்சம் அங்க

விகாரமுமுண்டு, சாம்ராஜ்ய யோகம் கெட்டுத் தரித்திரயோக முண்டாகும்.

(34) யோகங்கள் :—(1) உத்தமம், (2) மத்திமம், (3) அதமம், (4) அதமா அதமம், என நான்கு வகைப்படும். யோகங்கள் உண்டாயிருக்கும்போது சந்திரன் மேன்மையான கலாம்சத்தில் இருந்தால் உத்தமமானயோக முண்டாகும். சந்திரன் அதமா அதமமான பாகத்தில் துர்பலமாக விருந்தால் மேற்படி ராஜயோகம் நிஷ்பலனாய்விடும். இதைத் தசாபேதத்தால் சொல்லவேணும்.

(35) யோகத்தில் பிறந்த ஜாதகருக்கு, சந்திரன் உத்த மாம்சத்திலிருந்தால் ஜாதகர் சாத்துவீகம், நல்ல புத்தி உடையவர், மானி நியாயமாகச் சம்பாதித்து நல்ல ஜீவனமுடையவர், எப்போதும் நல்ல செய்கையும் ஆசாரமுமுடையவர்.

(36) யோகத்தில் பிறந்த ஜாதகருக்குச் சந்திரன் மத்திமாம்சத்தில் இருந்தால் ஜாதகர் ராஜசேவையும், ரஜோகுணமும், பாபத்துடன் புண்ணியமும், வித்தை, புத்தி இவைகளையும் உடையவர்.

(37) யோகத்தில் பிறந்த ஜாதகருக்குச் சந்திரன் அதமாம்சத்தில் இருந்தால் ஜாதகர் சதாரோகியாயும், அதர்மப் பிரியராயும், காமமுடையவராயும், எப்போதும் அனுச்சாரம் உடையவராயும், மிக்கத் தாழ்ந்த நிலையில் ஜீவனம் செய்பவராயும் இருப்பார்.

(38) யோகத்தில் பிறந்த ஜாதகருக்குச் சந்திரன் அதமா அதம பாகத்திலிருந்து, பரஸ்பர கிரகங்கள் ஒருவருக்கொருவர் இடம் மாறி இருந்தால் ஜாதகர் துக்கியாயும், அதமா, அதம ஜீவன முடையவராயும்,

கெட்ட விஷயத்தில் சம்மந்த முடையவராயும், வீணில் ஜீவித்திருப்பவராயும், அதிக உக்கிரமான கோப முடையவராயும், கலகப்பிரியராயும் எப்போதும் பாபம் செய்பவராயும், துஷ்ட ஜனங்களிடத்தில் பிரீதி உடையவராயும் இருப்பார்.

(39) மூன்று கிரகங்கள் உச்சத்திலிருந்தால் ஜாதகர் நல்ல புத்திமானுவார்.

குறிப்பு :—கிரகங்கள் மூலத்திரிகோணத்திலோ, உச்சத்திலோ, ஆட்சியிலோ, நட்புராசியிலோ, பகை ராசியிலோ, நீச்சத்திலோ குறைந்த பட்சம் பெரும்பாலும் இரண்டேகால் நாளுக்கு குறையாமல் இருக்கக் கூடும். ஆகையால் மூன்று கிரகங்களோ (அல்லது அதிக, குறைந்த. கிரகங்களோ) உச்சமாகவோ ஆட்சியாகவோ, இருக்கின்ற குறைந்த பட்சகாலமாகிய இரண்டேகால் நாளுக்குள் பிறக்கிற அனேகர் எல்லோரும் யோகமாகவே இருப்பது அசாத்தியமான சம்பவம், மேலும் இந்த இரண்டேகால் நாளுக்குள் பிச்சைக்காரர், தரித்திரர், ஒருவர்கூட பிறக்கமாட்டார்களா என்ற கேள்வியும் ஏற்பட மூகாந்தரம் உண்டாகிறது. ஆகையால் மேற்கண்ட கிரக அமைப்புப் பலன்களை அக்கிரகங்களுக்கு லக்கினத்திலிருந்து ஏற்படும் பாவ ஆதிபத்தியத்தையும், அவைகள் லக்கினத்திலிருந்து எத்தனையாவது பாவத்தில் (அதாவது நல்ல பாவத்திலா கெட்ட பாவத்திலா) இருக்கின்றன என்பதையும் முக்கியமாகக் கவனித்துச் சொல்ல வேண்டுமே தவிற ஒரே மாதிரியாகக் குருட்டு வழியாகச் சொன்னல் அப்பலன்கள் சரிவர நடைபெருது என்று முக்கியமாக அறியவும். கிரகங்களின் நல்ல கெட்டபலன்கள் அவைகளின் ஆதிபத்தியத்தையும்

அவைகள் லக்கினத்திலிருந்து இருக்கும் வீட்டின் எண்ணிக்கையையும், அனுசரித்து மாறிக்கொண்டே இருக்கின்றன என்று அறியவும்.

(40) மூன்று கிரகங்கள் சுய க்ஷேத்திரத்திலிருந் தால் ஜாதகர் மந்திரி யாவார்.

(41) மூன்று கிரகங்கள் நீச்சமாக விருந்தால் ஜாதகர் ஜடனுவார்,

(42) மூன்று கிரகங்கள் உச்சத்தில் அவயோகாம் சத்தி லிருந்தால் ஜாதகர் துக்கத்துடன் ஜீவிப்பார், துராத்துமா ஆவார்.

(43) மூன்று கிரகங்கள் நீச்ச ராசியில் இருந்து நல்ல யோகாம்சத்தி லிருந்தால் ஜாதகர் யோகவானுயும் போகவானுயும் இருப்பார்.

(45) ஒரே ராசியில் அல்லது ஒரே அம்சத்தில் சூரியனும் சந்திரனும், புதனும் இருந்து, லக்கினுதிபதி தன் உச்ச ராசியில் இருந்தாலும், அல்லது சூரியனும் புதனும் ஒரே ராசியில் அல்லது ஒரே அம்சத்தில் கூடியிருந்து லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் குரு இருந்தாலும், குரு தன் உச்ச ராசியில் இருந்தாலும் ஜாதகருக்குப் பண்டித யோகம் என்கிற ஒருவிதமான யோக முண்டாகிறது.

இந்தப் பண்டித யோகத்திற் பிறந்தவர் அரசனு வார், அல்லது அரசர்களுடைய சம்மதத்தின் பேரில் சாஸ்திர்ங்களைப் பார்ப்பவராயும். வித்துவானுகவும், விஷயம் தெரிந்தவராகவும், பிராம்மணர்களுடைய கூட்டத்தால் மதிக்கப்பட்டவராகவும், மர்மமுடையவ ராகவும், ஞானமுடையவராகவும், தர்மநெறி யுடையவ ராகவும், ஆவார்.

(46) குரு கேந்திரத் திரிகோணங்களில் புஷ்கராம்சத்தில் இருந்தால் ஜாதகர் நல்ல பாக்கிய மடைவார்.

அமலா யோகம்.

(47) சந்திர லக்கினத்திற்குப் பத்தாவது பாவத்தில் சுபக்கிரகம் இருந்தால் (இந்தப் பத்தாம் பாவராசி பாபருடைய ராசியா யிருந்தாலும் பரவாயில்லை) அமலாயோகம் உண்டாகிறது. ஜாதகர் தான் பூமியிலுள்ள வரையிலும் கீர்த்தியையும், அழியாத சம்பத்தையும் உடையவரா யிருப்பார் என்று மகரிஷிகள் எண்ணுகிறார்கள்.

அமலா யோகம்.

(48) சந்திரனுக்குப் பத்தில் குரு இருந்தாலும், சந்திரனுக்கு இரண்டு, நான்கு, ஆறு, ஒன்பது ஆகிய இவ் வம்சங்களில் பாபக்கிரக மில்லாதிருந்தாலும் ஜாதகருக்கு அமலாயோக முண்டாகிறது.

அமலா யோகத்தில் குரு லக்கின பாவத்திலிருந்தால் ஜாதகர் அதிக சம்பத்துடையவராகவும் போகியாகவும் தனமுடையவராகவும், கீர்த்தியும் சுகமு முடையவராகவும் ஆவார்.

நீச்சபங்க ராஜயோகம்.

(49) ஜாதகர் ஜெனித்த காலத்தில் எந்தக் கிரகம் நீச்ச ஸ்தானத்திலிருக்கின்றதோ அந்த நீச்ச ஸ்தானாதிபதியாவது அல்லது அந்த நீச்ச ஸ்தானத்தில் உச்சமடையும் கிரகமாவது சந்திர லக்கினத்திற்குக் கேந்திரத்தி லிருந்தால் நீச்ச பங்க ராஜயோகம் ஏற்படுகின்றது. ஜாதகர் ராஜாவாகவும். தர்ம நிறைந்த சக்கிரவர்த்தியாயும் ஆகி, மகா சுகத்தையும் அடைவார்

முப்பத்தைந்து வயதிற்குமேல் அல்லது முப்பத்து மூன்ருவது வயதிலேயே பாக்கிய யோக மடைவார்.

(50) நீச்சபங்க ராஜயோகத்தில் பிறந்தவர் மிருத ராஜயோகம் என்கிற ஒருவித ராஜயோகத்தில் கூட பிறந்தவரா யிருந்தால், ஜாதகர் சமையல் செய்பவரா யிருந்தாலுங்கூட பதாதிகளையுடைய அரசனைப்போல் ஜன சமூக முடையவராய்ச் சமூர்த்தியான சொர்ணம், ரத்தினம் முதலியவற்றை யுடையவராவார்.

## பத்திர யோகம்.

(51) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் சந்திரனும் ஒன்பதாமிடத்தில் சுக்கிரனு மிருந்தாலும், அல்லது இரண்டாமிடத்திலேயே அல்லது மூன்ருமிடத்தில் அல்லது பதினென்று பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன் இருந்தாலும் பத்திர யோகம் என்கிற ஒருவிதமான யோகமுண்டாகிறது. அதனல் ஜாதகர் சுகியாயும், வாசாலகராயும், நல்ல வாலிப சரீர முடையவராயும், ராஜ லக்ஷணம் நிறைந்தவராயும், வித்தை புத்தி யுடையவராயும், கல்வி யறிவுடையவராயும், எவ்வன ஸ்திரீகளிடத்தில் ரதி கேளிக்கை செய்பவாரயும், சூரியனைப் போலத் தேஜஸ¬டையவராயும். தீர்க்காயு ளுடையவராயும் இருபது வயதிற்குமேல் சிவ பாத பூஜையில் வல்லவராயும், பற்பல மந்திர சாஸ்திர ஆகமங்களைப் பரிசீலனை செய்பவராயும் வயோதிக வயதில் ஞான முடையவராயும், ஸ்ரீமானுயும், ஞான மிகுதி யுடையவராயும், அரசனுல் பூஜிக்கப்பட்டவராயு மிருப்பார்.

(52) லக்கினத்திலிருந்து இரண்டாம் பாவத்திலாவது, ஐந்தாம் பாவத்திலாவது, சுக்கிரன் ராஜ பூஜ்

யாம்சத்தி லிருந்து சுக்கிரன் இருக்கும் ராசியாதிபதி பலவானுக எங்கே யிருந்தாலும், ஜாதகர் ராஜனுடைய அருளை அடைவார், மகாராஜனுல் சந்தோஷிக்கப்படுவார்.

### துஸ் ஸ்தாஞதிபதிகள் என்ற 6, 8, 12-ம் அதிபதிகள்.

(53) (1) எட்டாம் பாவாதிபதி 12-ல் அல்லது 6-ல் இருந்தாலும்.

(2) ஆருவது பாவாதிபதி 8-ல், 12-ல் இருந்தாலும்.

(3) பன்னிரண்டாம் பாவாதிபதி 6-ல், 8-ல், இருந்தாலும்.

(4) 6, 8, 12-ம் பாவாதிபதிகள் ஆட்சியாய் இருந்தாலும்.

(5) 6, 8, 12-க் குடையவர்கள் ஒருவருக்கொருவர் இடம் மாறி (பரிவர்த்தனை அடைந்து) இருந்தாலும்.

(6) ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டாலும்.

ஜாதகர் அரசராகி மேன்மையான பலங்களை அடைந்து ராஜாதி ராஜர்களால் தோத்தரிக்கப்படுவார்.

(54) ஆருவது எட்டாவது பாவாதிபதிகள் ஒன்ருய்க்கூடி சனியுடன்கூடி யிருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகர் அற்பாயு ளுடையவர் என்று சர்வ நாடியில் சொல்லி இருக்கிறது என்று சந்திர கலா நாடியில் கண்டிருக்கிறது.

(55) ஒன்பதாம் பாவாதிபதி தன் உச்சஸ்தானத்தில் பதினோராவது பாவாதிபதியுடன் கூடினாலும் சந்திரனால் பார்க்கப்பட்டிருந்தாலும்,

(2) ஒன்பதாம் பாவாதிபதி லக்கினத்திற்குக் கேந்திரத்தில் கோணங்களில் புதனுடன்கூடி யிருந்தாலும்

ஜாதகர் ராஜனால் பூஜிக்கப்படும் யோகத்தை அடைவார், சம அங்கங்களுடையவர், யத்தினமின்றியே தனத்தை அடைவார், சகோதரக் குறைவு உடையவர், பிரசித்தமானவர், ஆயுளுள்ள புத்திரருள்ளவர்.

(56) லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதியும் இரண்டாம்பாவாதிபதியும் மித்திர க்ஷேத்திரத்தி லிருந்தாலும் தன் தன் உச்ச ராசியி லிருந்தாலும், இவர்கள் ஒன்பதாம் பாவத்திலேயே சுபருடன் கூடியிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும் ஜாதகர் அனேக கிராமம் தடாகம், கோபுரம், பட்டணம், உத்தியானம், முதலியவைகளையும் அடைவார், நல்லவர் சேர்க்கையை அடைவார், யாகக் கிரியைகளையும் நல்ல புத்திரர்களையும் அடைந்து பூமியில் வாழ்வார்.

(57) லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியாவது ஒன்பதாம் பாவாதிபதியாவது குருவுடன் கூடியிருந்தாலும் குருவால் பார்க்கப்பட்டிருந்தாலும் ஜாதகர் அரசனால் பூஜிக்கப்படுபவராகவும் கொடையாளியாகவும் சர்வ ஐஸ்வரியங்கள் உடையவராயும் இருப்பார்.

(58) லக்கின பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து பதினோராம் பாவாதிபதி ஒன்பதாம் பாவத்திலிருந்தாலும், அல்லது பதினோராம் பாவாதிபதி ஒன்பதாம் பாவாதிபதி பத்தாம் பாவாதிபதி இவர்களுடன்

கூடியிருந்தாலும் ஜாதகர் பணக்காரராகவும், மகானுக வும், பாக்கியமுடையவராகவும் இருப்பார்.

(59) லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி கேந்திர திரிகோணங்களி லிருந்து பலமுள்ள சுபருடன் கூடி அல்லது பலமுள்ள சுபரால் பார்க்கப்பட்டு இருந்தாலும், அல்லது சுராம்சத்தில் அல்லது ஒன்பதாவது அம்சத்தி லிருந்தாலும் ஜாதகர் தனத்தைச் சம்பாதிப்பார், விசேஷ பாக்கியத்துடன் இருப்பார்.

(60) லக்கினுதிபதிக்கு இரண்டாம் பாவத்தில் குரு இருந்து, ஐந்தாமிடத்தில் சுபரிருந்து, பாபர் தன் உச்சத்தி லிருந்தால் ஜாதகர் இராஜ முத்திரை தரித்து அதிகாரம் செய்பவராய் இருப்பார்; ராஜாவுக்குச் சமானமான வைபவ முடையவரா யிருப்பார்.

(61) லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் சுபர் இருந்து (பலக்குறைவான பாபர்களால் பார்க்கப்பட்டாலும்கூட) ஜாதகர் தெரிந்தும் தெரியாமலும் விசேஷ சம்பத்தை அடைவார்.

## ஸாமந்த யோகம்.

(62) லக்கினத்திற்கு இரண்டாம் பாவத்தில் அல்லது உச்ச ராசியில் சுபர் இருந்து, மூன்றும் பாவத்தில் பாபர் இருந்தாலும்

(2 அல்லது லக்கினந்தித்திற்கு நான்காம் பாவத்தில் அல்லது உச்ச ராசியில் சுபர் இருந்தாலும்.

(3) அல்லது லக்கினத்திற்கு ஐந்து ஒன்பதாவது பாவங்களில் சுபர் இருந்தாலும்,

(4) அல்லது லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் பாபரும் ஒன்பதாம் பாவத்தில் சுபரும் இருந்தாலும்,

ஜாதகர் ஸாமந்த யோகத்தில் ஜெனித்தவ ராவார். இந்த யோகத்தில் பிறந்த ஜாதகர் அரச ராவார்.

(63) லக்கினத்தில் சுபர்களான சுக்கிரன் புதன் இவர்கள் இருக்கும்போது லக்கினத்தில் குரு இருந்தாலும் அல்லது லக்கினத்தைக் குரு பார்த்தாலும் ஜாதகர் தனத்தை அடைவார், தீக்ஷன்ய புத்தியுடையவர், குலத்திற்குக் கீர்த்தியைப் பெருகச்செய்பவ ராவார்.

(64) ஜென்ம லக்கினத்தில் பாபக்கிரகங்கள் இருந்தால் ஜாதகர் ஆசையுள்ளவராகவும், துர்பலமுடையவராகவும், சத்துருக்களால் பீடிக்கப்பட்டவராகவும் இருப்பார். மேலும் மேற்படி லக்கினத்திலுள்ள பாபக்கிரகங்கள் எட்டாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் ஜாதகர் தரித்திரராகவும், வியாதி உடையவராகவும் ஆவார். மேலும் மேற்படி லக்கினத்திலுள்ள கிரகங்களை ஏழாமாதிபதி பார்த்தால் ஜாதகர் சுகியாக விருப்பார், ஆறாமாதிபதி பார்த்தால் ஜாதகர் தரித்திரராக விருப்பார்.

(65) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாமாதிபதி அஷ்டமாதிபதியுடன் சம்மந்தப்பட்டிருந்தால் இரண்டாமாதிபதியின் தெசையில் ஜாதகர் தன் தேசத்தை விட்டு வெளி தேசம் போய்விடுவார். தன் தகப்பனார் முதலியவர்களுக்குக் கிலேசமும் தன் கிராம ஜனங்களின் விரோதமும், மானம், தனம், பயிர் இவைகளின் நாசமும் வெளிதேச பலனும் ஏழாமாதிபதியின் புக்தி அந்தரம் இந்த காலங்களில் உண்டாகும்.

(66) சூரிய அஷ்டவர்கத்தில் சூரியன் இருக்கின்ற ராசியில் எத்தனை (சமுதாயப்) பரல்கள் இருக்கின் றனவோ அத்தனை பேர் தகப்பனுருடைய சகோதர் கள் ஆகும்.

(67) சந்திர அஷ்டவர்கத்தில் சந்திரன் இருக்கின்ற ராசியில் எத்தனை (சமுதாயப்) பரல்கள் இருக்கின்ற னவோ அத்தனை பேர் தாயாருடைய சகோதர்கள் ஆகும்.

(68) ஏழாம்பாவாதிபதி இருக்கின்ற அம்சராசிக் குத் திரிகோண ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ் சரிக்கும் போது ஜாதகருடைய ஜென்ம (1-வது,) சம் பத்து (4-வது) தெசைகளில் ஜாதகருடைய தகப்பனு ருக்கு விரயமும் மனோவியாதியும் உண்டாகும், அல்லது தகப்பனுருடைய சகோதரியாவது, தாயாருடைய நெறுங்கின பந்துவாவது மரணமடைவார்.

(69) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதி பதி ஜெனன ஜாதகத்தில் இருக்கும் அம்சத்திலா வது அல்லது அந்த அம்ச ராசிக்குத் திரிகோண ராசியிலாவது அல்லது ஒன்பதாம் பாவாதிபதி இரா சிச்சக்கிரத்தில் பார்க்கின்ற இராசியிலாவது கோச் சாரத்தில் குரு வரும் போது ஜாதகர் பாக்கியத்தை அடைவார்.

(70) ஜென்ம லக்கினுதிபதி இருக்கும் அம்சராசி யிலும் அல்லது இராசிச் சக்கிரத்தில் லக்கினுதிபதி இருக்கும் அல்லது பார்க்கின்ற ராசிகளிலும் கோச் சாரத்தில் குரு சஞ்சரிக்கும்போது ஜாதகருக்கு நல்ல பலனுண்டாகும்.

(71) ஜென்ன லக்கினாதிபதியின் அஷ்டவர்க்கத்தில் (திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை ஆனபிறகு நிற்கின்ற) சோத்தியப் பரல்கள் குறைந்த பரலாய் இருக்கின்ற இராசிகளில் கோச்சாரத்தில் குரு சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு அற்ப சௌக்கியமும் பலனும் ஏற்படும். இந்தச் சோத்தியப் பரல்கள் ஒன்று, இரண்டு, மூன்று, ஆகி இந்தப்பரல்கள் உள்ள ராசியில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யுங்காலத்தில் ஜதாகருக்கு அதிக கிலேசமுண்டாம்.

(72) ஜென்ன காலத்தில் சந்திரன் எட்டாவது அம்சம் தவிற மற்ற அம்சத்தி லிருந்து, சந்திரன் தன்னுடைய அஷ்டவர்க்கத்தில் எட்டு பரல்க ளுடன் (அதாவது பூர்ண பலத்துடன்) இருந்தால் சந்திரன் இருக்கின்ற இராசிக் கதிபதியின் தெசையில் ஜாதகருக்கு ராஜயோகமும் சுகமும் உண்டாம்.

(73) தெசாநாதன் பூர்ணபலத்துட னிருந்தால் கீர்த்தியும் சௌக்கியமும் கொடுப்பார்.

தெசாநாதன் மத்திமமான பலத்துடனிருந்தால் மத்திமமான சுகத்தைக் கொடுப்பார், ஆரம்பித்த காரியங்கள் நிதானமாகப் பலிதந்தரும்.

(74) தெசாநாதன் குறைந்த பலமுள்ளவரா யிருந்தால் திரவிய நாசம், இருக்கும் ஸ்தானத்தை விட்டு வேறு இடம் போகுதல், ஜனங்களால் நிந்திக்கப்படுதல், அபவாதம், பசு, ஜீவநாசம், அதிகதுக்கம் ஆகிய இவைகள் உண்டாகும், மேலும் விரோதம், ரோகம், பந்துக்களுக்கு ஏற்படும் கெண்டத்தால் துன்பம் ஆகிய இவைகள் உண்டாம்.

(75) யோக கிரகத்தின் அம்சத்திலுள்ள கிரக தெசையில் ஜாதகருக்கு மனைவி, மித்திரன், பந்து, வித்தை இவைகள் தானாகவே வரும், அரசனுடைய மான்யாதிகளும் தானாகவே வரும்.

(76) சத்துரு கிரகத்தின் அம்சத்திலுள்ள கிரக தெசையில் ஜாதகருக்கு ராஜபயமும், திருடு முதலிய பயமும், ஸ்தான நாசமும், இஷ்ட ஜனங்களுடன் விரோதமும், தன் அரசாங்க காரியங்களால் விசாரமும் ஏற்படும்.

(77) சத்துரு வீட்டிலோ அல்லது சத்துரு கிரகத்தின் அம்சத்திலோ உள்ள கிரக தெசையில் தன் வீட்டிலுள்ள கிரகங்களின் புக்தியில் அல்லது சத்துரு கிரக புக்தியில் அல்லது அந்தரத்தில் சத்துருபயமும் அதனால் தோஷமும் ஏற்படும்.

(78) ஆறு, எட்டு, பன்னிரண்டாம் அதிபதிகளின் தெசை புக்திகளில் சுபமும் அசுபமும் உண்டாகும்.

(79) அஷ்டவர்க்கத்தில் ஒன்று, இரண்டு, மூன்று பரல்கள் உள்ள ராசியில் உள்ள கிரகத்தின் தெசா புக்தியில் ஜாதகருக்கு அதிக கிலேசமும், தன தான்ய பசு நாசமும், உண்டாம்.

(80) அஷ்டவர்க்கத்தில் ஐந்து பரல்கள் உள்ள ராசியில் உள்ள கிரகத்தின் தெசாபுக்தியில் சுபங்களும் காரியசித்தியும் சம்பத்தும் உண்டாகும்.

(81) அஷ்டவர்க்கத்தில் சூரியன் நின்ற ராசியில் பரல் குறைவாயிருந்தால் சூரியன் தெசை, சூரிய புக்தி இவைகளில் பலன் விருதாவாகப் போய்விடும்

(82) அஷ்ட வர்க்கத்தில் சந்திரன் நின்ற ராசியில் பரல் குறைவா யிருந்தால் சந்திர தெசை சந்திரபுக்தி இவைகளில் பலன் விருதாவாகப் போய்விடும்.

(83) சந்திரலக்கினம் சரீரம் என்றும் ஜென்ம லக்கினம் பிராணன் என்றும் சர்வ நாடியில் கூட சொல்லியிருப்பதாக இருக்கிறது. ஆகையால் சரீரம், பிராணன் இவைகளையும் கவனித்துப் பலன் சொல்ல வேண்டும், என்று இந்தச் சந்திர கலா நாடியில் கண்டிருக்கின்றது.

## கோச்சாரப் பலன்

(84) கோச்சரத்தில் சூரியன் மூன்று ஆறு, பத்து இந்த ராசிகளில் வரும்போது ஜாதகருக்கு நல்ல பலன்கள் உண்டாகும்.

(85) கோச்சாரத்தில் சந்திரன் ஒன்று, மூன்று, ஆறு, ஏழு, பத்து இந்த ராசிகளில் வரும் போது ஜாதகருக்கு நல்ல பலன்கள் உண்டாகும்.

(86) கோச்சாரத்தில் புதன் இரண்டு, நான்கு' ஆறு, எட்டு, பத்து இந்த ராசிகளில் வரும் போது ஜாதகருக்கு நல்ல பலன்கள் உண்டாகும்.

(87) கோச்சரத்தில் குரு இரண்டு மூன்று, ஐந்து, ஒன்பது இந்த ராசிகளில் வரும் போது ஜாதகருக்கு நல்ல பலன்கள் உண்டாம்.

(88) கோச்சாரத்தில் எல்லாக்கிரங்களும் பதினொன்றில் வரும் போது ஜாதகருக்கு நல்ல பலன்கள் உண்டாகும் என்று இந்தச் சந்திர கலா நாடியில் சொல்லி இருக்கிறது. கோச்சாரப் பலன் முடிவு.

(89) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு ஏழுக்குடையவர்கள், அல்லது பத்தாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டவர், கூடியிருக்கப்பட்டவர் ஆகிய இவர்களுடைய தெசா புக்தி காலங்களில் மரணத்திற்குச் சமானமான கெண்டம் ஜாதகருக்கு நேரிடும்.

(90) கோச்சாரத்தில் சனி 1-ல் சஞ்சாரஞ் செய்யும் போது விபத்து, 2-ல் ஹானி, 3-ல் சம்பத்து, 4-ல் வயிற்று ரோகம், 5-ல் மஹாபயம், 6-ல் சத்துரு க்ஷயம், 7-ல் மகாதைரியம், 8-ல் மரண கெண்டம், 9-ல் தேக எரிச்சல், 10-ல் பீடை, 11-ல் லாபம், 12-ல் நஷ்டம், ஆகிய இப் பலன்களைக் கொடுப்பார் என்று இந்த சந்திர காலா நாடியில் சொல்லி இருக்கிறது.

(91) சுக்கிரனுடைய அஷ்டவர்க்கத்தில சுக்கிரன் இருக்கும் ராசியில் எத்தனை, (சமுதாயப்) பரல்கள் இருக்கின்றனவோ அத்தனை மனைவிகள் அல்லது ஸ்திரீ சம்பந்தம் ஜாதகருக்கு உண்டாகும்.

(92) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபதி தன்னுடைய உச்சராசியி லிருந்தால் ஜாதகருக்கு இரண்டு மூன்று தீர்காயுளுடைய மனைவிகள் அல்லது ஆசை ஸ்திரீகள் (அபிமான ஸ்திரீகள்) இருப்பார்கள்.

(93) சுக்கிரனுடைய அஷ்டவர்க்கத்தில் சந்திரன் இருக்கும் ராசிக்கு ஏழாவது ராசியில் எத்தனை (சமுதாயப்) பரல்கள் இருக்கின்றனவோ அத்தனை மனைவிகள் அல்லது ஸ்திரீ சம்பந்தம் ஜாதகருக்கு உண்டாகும்.

(94) ஜாதகருடைய தாயின் சகோதரியின் புத்திர ஸ்தானம் பத்தாம் பாவம் ஆகும். இந்தப் பத்தாம் பாவத்தில் குரு பலமுடையவராய் இருந்தால் ஜாத

கரின் தாயின் சகோதரியின் புத்திரன் தீர்க்காயு ளுடையவர், நல்ல யோக முடையவராகவும் இருப்பார், சந்ததிகள் உடையவராய் இருப்பார்

(95) சந்திரன் இருக்கின்ற ராசியில் கோச்சாரத் தில் சனி சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குச் சத்துருபயம், ராஜபயம், உண்டாகும். சாந்திசெய்தால் இது குறையும், வனதுர்காத்தானம் செய்யவேணும். என் சத்துருவர்க்கம் அழிவதற்காகக் கோடாலியைத் தரித்த என் குலதேவதையே! உன்னைப் பூஜிக்கிறேன் என்று ஜாதகர் தன் மனதில் தியானஞ் செய்து கொண்டு அதற்குரிய மந்திரத்தைச் சொன்னால் சத் துரு நாசமாகும், ராஜபயமும் குறையும்.

(96) லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதியின் தெசையில் வேதகன் என்ற வேதக கிரக புக்தியில் ஜாதகருடைய ராஜாங்க சம்மந்தமான ஜனங்கள் முத லானவர்களுடைய விரோதம் ஏற்பட்டு ஜாதகருக்கு மனச்சஞ்சல முண்டாகும். மேலே அயிட்டம் நெ. 95-ல் சொல்லிய பிரகாரம் சாந்தி செய்தால் இந்தக் கஷ்டங் குறையும்

(97) ஜென்ம லக்கினத்திற்கு அதிபதி சத்துரு பாவ மாகிய ஆறும்பாவத்தில் இருந்து அந்தப் பாவாதிபதி யும் தன் சத்துரு வீட்டிலிருந்து எட்டாம் பாவாதிபதி யுடன் கூடியிருந்தால் ஜாதகருக்கு வயிற்று ரோக முண்டாகும்.

(98) ஜென்ம லக்கினத்திற்கு ஆறு, எட்டிற்குடை யவர்களின்தெசையில் துஸ் ஸ்தானங்களில் (6-8-12ல்) உள்ளவர்களின் புக்தியில் குரூர மாதங்களில் குரூர வருஷங்களில் ஜாதகருக்குச் சத்துரு பயம் ஏற்படும்.

அதற்குச் சாந்தி செய்ய வேண்டும். அதற்குப் புத்தி மானனவர் ஜப ஹோமாதிகள் செய்து கோடாலி தானம் செய்தால் சத்துரு பயமும் மனஸ்தாபமும் நீங்கும்.

(100) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம்பாவாதிபதி யுடன் அல்லது லக்கினதிபதியுடன் கூடியிருக்கும் சுபக்கிரகத்தின் தெசாபுக்திகளில் ஜாதகருக்கு மனைவி லாபமும், சம்பத்து விருத்தியும், தினம் தினம் பாக்கிய விருத்தியும் உண்டாகும்.

(101) ஜென்மலக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி நவாம்ச சக்கிரத்திலிருக்கும் ராசியின் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதக ருடைய தகப்பனருக்குக் கெண்டமும் நேரிடும்.

(102) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்திலிருக்கும் ராசியின் திரிகோணத்தில் அல்லது பதினோராம் பாவாதிபதி இராசிச் சக்கிரத்தில் பார்க்கும் ராசியில் சனி கோச்சா ரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருடைய தாய்க்குக் கெண்டமும் மரணமும் நேரிடும், வியாக்கூலம் ஏற்படும் ஜாதகருடைய மனைவி வம்சத்தில் மனஸ்தாபம் உண் டாகும், யோகபங்க முண்டாகும்.

(103) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவா திபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரி கோணத்தில் அல்லது இரண்டாம் பாவாதிபதி இராசிச் சக்கிரத்தில் பார்க்கும் ராசியில், சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யுங் காலத்தில் ஜாதகருடைய மனைவி வம்ச ஜனங்களுக்கு அவதி (கெடுதி) நேரிடும், இவ்விதம் நேரிடாவிட்டால் மனைவிக்காவது தேக ஜாட்டியமும்,

சந்தானக் கிலேசமும், மாமனார் முதலானவர்களுக்குப் பீடையும் உண்டாகும்.

(104) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தில் ராகு (பலமாயிருந்து) ராகு தெசை நடந்தால் அத்தெசையில் பத்தாம் பாவாதிபதி புக்தியில் அல்லது இரண்டாம் பாவாதிபதியின் புக்தியில் ஜாதகருக்குத் தன லாபமுண்டாகும் (இதற்கு இரண்டு அல்லது பத்திற்குடையவர்கள் நல்ல பாவத்தில் வலிவுடன் இருக்க வேணும்)

(105) ஜென்ம லக்கினாதிபதி பார்க்கும் ராசிக்குத் திரிகோணத்திலாவது அல்லது ஜென்ம லக்கினாதிபதி அம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசித் திரிகோணத்திலாவது குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு உடன் பிறப்பு உற்பத்தியாகும் அதாவது சகோதர சகோதரி உண்டாகும்.

(106) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி அல்லது பதினோராம் பாவாதிபதி அம்சச் சக்கிரத்தில் (அதாவது நவாம்சச் சக்கிரத்தில்) இருக்கும் ராசியின் திரிகோணத்தில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு உடன்பிறப்பு உண்டாகும்

(107) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி அல்லது ஏழாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்திலிருக்கும் ராசிக்குத் திரிகோணத்தில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குப் புத்திர உற்பத்தி உண்டாகும்.

(108) ஜென்ம லக்கினத்திற்கு ஆறாம்பாவாதிபதி இராசிச்சக்கிரத்தில் பார்க்கும் ராசியிலாவது, அல்லது நவாம்சச்சக்கிரத்தில் ஆறாம் பாவாதிபதி இருக்கும்

ராசிக்குத் திரிகோணத்திலாவது சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ்செய்யும்போது ஜாதகருடைய மூத்த சகோதாருக்கு மனைவியாதி உண்டாகும், மூத்த சகோதராருடைய மனைவிக்கு அரிஷ்டம் நேரிடும். இதைப்போலவே மூத்த சகோதரிக்கு மனைவியாதி உண்டாகும், மூத்த சகோதரியின் கணவருக்கு அரிஷ்டம் உண்டாகும்.

(109) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாவது பாவத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய மாமனுருக்குக் கஷ்டமுண்டாகும், ஜாதகருக்குத் தேக ஆயாச முண்டாகி பிறகு ஆரோக்கிய முண்டாகும்.

(110) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவத்தில் குரு இருந்தால் அவர் தெசையில் சுய் புக்தியில் புண்ணிய தீர்த்தப் பலப் பிராப்த்தி உண்டாகும்.

(111) சந்திர லக்கினத்திற்கு எட்டாமிடத்தில் குரு இருந்தால் சகடயோக முண்டாகின்றது என்று இந்தச் சந்திர கலாநாடியிற் சொல்லி இருக்கிறது. குரு தெசை முதலில் ஜாதகருக்கு மனைவியாதி உண்டாகும்.

குறிப்பு:—இதற கிரந்தங்களில் சந்திரன் தேய்பிறை சந்திரனாய் இருக்க வேண்டும் என்று கண்டிருக்கின்றது. குருவிற்கு 6, 8, 12-ல் தேய்பிறை சந்திரன் இருக்கச் சகடயோகம் உண்டாகின்றது. ஆனால் குரு அல்லது சந்திரன் லக்கினத்திற்குக் கேந்திரத்திலிருந்தால் இந்தச் சகடயோகம் பங்கம் உண்டாகிச் சகட யோகம் பலவீனப்பட்டு விடுகிறது என்று சில கிரந்தத்தின் மதம்.

(112) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசிக்குத் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருடைய மாமனுருக்குப் பீடை உண்டாகும், மாமனுருடைய வர்க்கத்தில் உபத்திரவம் உண்டாகும்.

(113) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியின் தெசையில் தன் சுய புக்தியில் மாமனுருக்குக் கெண்டம், மரணம் முதலியவை ஏற்படும்.

(114) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதியின் தெசையில் பதினோராம் பாவாதிபதிக்குத் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் வரும்போது ஜாதகருடைய தாயாருக்குக் கெண்டம், மரணம் முதலியவை நேரிடும்.

(115) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவத்தில் சனி ஆறும் பாவாதிபதியுடன் இருந்தால் ஆறும் பாவாதிபதியின் தெசைசந்தியில் குரூரக் கிரகத்தின் அந்திரத்தில் ஜாதகருக்குத் தன் சகோதரனுல் சோக முண்டாகும்.

(116) ஜாதகருடைய சிறிய தகப்பனுருக்குப் புத்திரஸ்தானம் மூன்றுமிடம் ஆகும்.

(117) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் பல முடையவரா யிருந்தால் தன்னுடைய தெசையிலும் புக்தியிலும் ஜாதகருக்குப் பூமி, தனம் முதலான லாபமும், புத்திர பாக்கியமும், அரச சன்மானமும் பூஷணலாபமும் கொடுப்பார் என்று மகரிஷிகள் சொல்லியிருப்பதாக இந்தச் சந்திர கலா நாடியிற் சொல்லி இருக்கிறது.

(118) ஒரு சுபக் கிரக தெசையில் ஜென்ம லக்கி னத்திற்குப் பன்னிரண்டா மாதிபதி அந்தச் சுபக் கிர கத்திற்கு வேதகனுய் இருந்தால் தன் புக்தியில் ஜாத கருக்குச் தேசாந்திர வாசத்தைக் கொடுப்பார். பிறகு அந்தச் சுபக் கிரக தெசையின் முடிவில் சுபமும் தன லாபமும் ராஜ்யப் பிரீதியும் ஜாதகருக்கு உண்டாகும்.

(119) ஜாதகருக்குப் பிதா மகன் ஸ்தானம் ஐந்தாம் பாவ மாகும். (அதாவது ஒன்பதுக்கு ஒன்பதாகிய ஐந்தா மிடம் ஆகும்.)

(120) ஜென்ம லக்கினம் சிம்மமாகி அதில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகரு டைய தகப்பனுருக்குத் தேக ஜாட்டிய முண்டாகும். சேர்த்து வைத்த திரவியம் அழியும்.

(121) ஜென்ம லக்கினம் எந்த லக்கினமா யிருந்த போதிலும் சூரிய லக்கினத்தில் (அதாவது சூரியன் இருக்கும் வீட்டில்) சூரிய காலத்தில் பாபர் இருக்கும் போது பிறந்தவருடைய தகப்பனுருக்குப் பீடை உண்டாகும்.

(122) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதி பதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரி கோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருடைய தகப்பனுருக்குத் தேக ஜாட்டிய முண்டாகும், அதனுல் ஜாதகருக்குச் சுயமாக வியாகூல முண்டாகும்.

(123) ஜென்ம லக்கினத்தைக் கொண்டாவது சந்திர லக்கினத்தைக் கொண்டாவது ஜாதகருடைய தாயின் அரிஷ்டத்தை அறிய வேண்டும்.

(124) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய தகப்பனுடைய மித்திரரினத்தில் வெகுவாகக் கிலேசமுண்டாகும். ஜாதகருடைய பந்து வர்க்கத்திலும் வியாகூல முண்டாகும், மனைவி வம்ச ஜனங்களுக்கும் அவதி உண்டாகும்.

(125) ஜெனன ஜாதகத்தில் ஒவ்வொரு பாவத்திற்கும் அந்தப் பாவாதிபதியின் தெசையில் அந்த பாவத்திற்கு மூன்று, ஆறு, எட்டு, இந்தப் பாவங்களின் அதிபதியின் புத்தியில் கிரமமாக அதிகப்படியான துக்க முண்டாகும்,

சுபரால் பார்க்கப்பட்ட பாவமும், கேந்திர திரிகோணதிபதிகளால் பார்க்கப்பட்ட பாவமும் சுப பலனைக் கொடுக்கும்.

மேலும் பிதுரு, மாதுரு, சகோதர, களத்திரப் பாவங்களுக்கு (அந்தந்த பாவத்தின்) அஷ்டமாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது அந்தந்தப் பாவத்திற்கு நாசம் ஏற்படும்.

(126) மகர லக்கின ஜாதகத்திற்குப் பத்தாம் பாவாதிபதி ஆறும் பாவத்தில் ஆறும் பாவாதிபதியுடன் கூடி இருந்தால் ஜாதகர் ராஜசேவியாகவும், நல்ல புத்தியாளுகவும் மிருப்பார், ஆறுவது பாவாதிபதியின் தெசையில் ராஜ்யாதிபத்திய மடைவார், அல்லது சேனதிபதியாக ஆவார், ராஜமந்திரி நேசமுடையவர், பாக்கிய முடையவ ராவர்.

(127) ஜென்ம லக்கினம் மகரமாகி பத்தாம் பாவாதிபதியும் ஒன்பதாம் பாவாதிபதியும் (லக்கினாதிபதி, தனாதிபதியாகிய) சனியும் கூடினால் ஜாதகர் வெகுபாக்கியமுடையவராவர். அரசனுக்குச் சமான மான யோகத்தை அனுபவிப்பார். (எல்லா லக்கினங்களுக்கும் ஒன்பது, பத்து ஒன்று அல்லது இரண்டு இந்த பாவாதிபதிகள் கூடினால் இதே பலன் நடக்கும் என்று யூகிக்கவும்.) இந்தப் பத்தாமாதிபதி இராஜாம்சத்திலிருந்தால் ஜாதகர் அரசனாகவே ஆவார், மந்திரியின் யோகத்தி லிருந்தால் மந்திரியாகவே ஆவார், ராஜாங்க காரியாவார், எட்டாம் பாவாதிபதியுடன் இந்தப் பத்தாம் பாவாதிபதி கூடினால் இந்த ராஜயோகங் குறைந்து அற்ப யோக மாகப் போய்விடும். இந்த மகர லக்கின ஜாதகத்திற்குச் சனி கும்ப நவாம்சத்திலிருந்து எட்டாம் பாவாதிபதி சம்மந்தம் இராவிட்டால் ஜாதகர் அனேக சேனை, குதிரைகளுக்கு நாயகனாவார்.

(128) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பது பத்திற்குடையவர்கள், ஐந்து, பதினொன்றுக் குடையவரானால் இவர்கள் கூடினால் மட்டும் ராஜயோக முண்டாகும். இந்தக் கர்மாதிபதி அதாவது பத்துக்குடையவர் தரித்திர அம்சத்திலிருந்தால் ஜாதகர் எப்போதும் தரித்திர ஜீவனத்தை அடைவார், சந்தேக மின்றி ஜாதகருக்கு உஞ்ச விருத்தி ஜீவனம் என்றும் அல்லது பிக்ஷான்னம் உண்ணும் ஜீவனம் என்றும் சொல்லப்படுகிறது.

(129) மேற்படி பத்தாம் பாவாதிபதி எந்த விடத்திலிருந்தாலும், ராஜமாத்தியாம்சத்தி லிருந்தால், ஆறும் பாவாதிபதியுடன் கூடினால் ஜாதகர் அரசாங்க சேவையுடையவர், நல்ல பாக்கிய முவடயவர் ஆவார்.

(130) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி பத்தாம் பாவத்தில் பலவானுகவிருந்து சுபாம்சத்தி லிருந்தால் ஜாதகர் ராஜனுக்குச் சமமான ஸ்ரீமானுவார், தனசம்பாதனை யுடையவர்.

ரிஷப லக்கினத்திற் பிறந்தவருக்கு இவ்விதமாக கிரக மிருந்தால் அவருக்கு அல்ப புத்திர ருண்டாவார்.

மேஷ லக்கினத்திற் பிறந்தவருக்கு இவ்விதமாகக் கிரக மிருந்தால் அனேக புத்திர ருண்டாவார்.

(131) ஜென்ம லக்கினத்திற்குக் குரு பத்தாம் பாவாதிபதியாகிக் கேந்திரத்தில் அல்லதுலாபத்தில், திரிகோணத்தில் இருந்து பாபருடன்கூடி இருந்தாலும் ஜாதகர் பிரசித்தி அடைவார்; நீச்சத்தில் மேற்படி (இந்த) குரு இருந்தால் ஜாதகர் ராஜபுத்திரனுக்குப் பிரிய ராவார், இந்தக் குரு தன் உச்சத்தில் இருந்தால் ஜாதகர் அரசனை அடைந்து சுகி ஆவார், பிதுரார்ஜித தன மடைவார்.

மேற்படி (இந்த) பத்தாம் பாவாதிபதி ஏழாம் பாவத்தில் இருந்தால் ஜாதகர் சந்தேக மில்லாமல் பிச்சை எடுத் துண்பார்.

பத்தாம் பாவாதிபதி பதினோராம் பாவாதிபதி யுடன்கூடி இருந்தால் ஜாதகருக்கு அற்ப சுகமுண்டாகும்.

(132) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி செவ்வாயாகி இவர் தன் நீச்சராசியில் இருந்தும், தன் உச்சாம்சத்தில் இருந்தாலும் அல்லது இராசிச் சக்கிரத்தில் சூரியனுடைய ராசியாகிய சிம்மத்திலிருந்தாலும் ஜாதகர் பிரசித்த ராவார், அயலார் தனத்தை

அபகரிக்கும் தன்மை யுடையவர், இறந்த குழந்தைகளை உடையவர் அல்லது சகோதர சோக மடைவார், தன் மித்திர பந்து, தாயாதி இவர்களுடைய தனத்தை அடைந்து அதனால் சுக மடைவார், வயோதிக வயதில் அக்னி மந்தம் ஜுரம் இவற்றால் மரண மடைவார்.

(133) ஜென்ம லக்கினம் ரிஷபமாகிப் பத்தாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்தாலும், சுய க்ஷேத்திரத்தி லிருந்தாலும் ஜாதகர் தர்மிஷ்டர், ஒரே தீர்க்காயு ளுள்ள புத்திரனை உடையவர், அனேக சகோதரர்களை இழந்தவரு மாவார்.

(134) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி ஒன்பதாம் பாவாதிபதியுடன்கூடி பதினோராம் பாவத்தி லிருந்தால் ஜாதகர் ஜென்ம முதல் சம்பத் துடையவ ராகி ஆயுளுள்ள வரையிலும் பாக்கியவானு யிருப்பார்.

(135) ஜென்ம லக்கினம் கடகமானால் சுக்கிரன் நவாம்சச் சக்கிரத்திலிருக்கும் ராசிக்குத் திரிகோணத் தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய மனைவியின் தேகத்திற்குப் பீடை உண் டாகும், ஜாதகருடைய தாய்க்குக் கெண்ட முண்டாகும்.

(136) ஜென்ம லக்கினம் கடகமாகிச் செவ்வாய் நவாம்சச் சக்கிரத்தி லிருக்கும் ராசிக்குத் திரிகோணத் தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய தகப்பனுருக்குக் கெண்டம் நேரிடும்.

(137) ஜென்ம லக்கினம் கடகமானால் புதன் நவாம் சச் சக்கிரத்தி லிருக்கும் ராசிக்குத் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய சகோதரருங்கு அரிஷ்டம் நேரிடும்.

(138) ஜென்ம லக்கினத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டாம் பாவாதிபதிகளின் தெசையில் அல்லது புத்தியில் ஜாதகருக்கு மனோ வேதனை உண்டாகும், சுய ஜென நாச முண்டாகும், தாயாதி வர்க்கத்தில் விசேஷ முண்டாகும்.

(139) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்திற் கதிபதி நவாம்சச் சக்கிரத்தி லிருக்கும் ராசிக்குத் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய தாயாதி வம்சத்தில் புத்திர நாசமும் கெண்டமும் உண்டாகும் (குறிப்பு:—பத்தாம் பாவம் தாயாதியின் புத்திர ஸ்தான மாகும்.)

(110) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தி லிருக்கும் ராசிக்குத் திரிகோணத்தில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யுங் காலத்தில் ஜாதகருக்குத் தீர்க் காயுளுடைய புத்திரன் பிறப்பான், சிவானுக் கிரகத்தால் ஜாதகர் தன மடைவார். (குறிப்பு :—இந்தப்பலன் தேவி நாமாம்சம் என்கிற ஈசுவராம்சத்தில் பிறந்தவருக்குத் தவறாமல் நடக்கும்.)

(141) ஜென்ம லக்கினம் ஸ்திர ராசியாகி (அதாவது ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பமாகி) லக்கினாதி யோக முண்டானால் ஜாதகர் இராஜ வம்சத்தில் பிறந்தவரானால் ஜாதகருக்கு ராஜ்யலாபமும், ஜாதகர் மற்றவம்சத்திற் பிறந்தவரானால் அவருக்கு நல்ல பாக்கியமும் உண்டாகும். (குறிப்பு :—லக்கினாதி யோகம் என்பது லக்கினத்திற்கு ஆறாவது, ஏழாவது, எட்டாவது பாவத்தில் சுபர் இருப்பது, இது லக்கினத்தை அனுசரித்த ஒருவித அதியோகம் என்றும் சொல்லப்படும். சந்திரனுக்கு ஆறாவது, ஏழாவது, எட்டாவது பாவத்தில் சுபரிருப்பது சந்திராதி யோகம் என்று

சொல்லப்படும், இது சந்திரனை அனுசரித்த ஒருவித அதி யோகம் என்று சொல்லப்படும்.)

(142) ஜென்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி, பத்தாமாதிபதி லக்கினாதிபதி இவர்கள் கேந்திரத்திலும் லாபத்திலும் திரிகோணத்திலும் இருந்து, சனி பலிஷ்டராக இருந்தால் ஜாதகருக்குப் பூர்ணாயுள் உண்டாகும். இது சந்திர கலா நாடி மதம் ஆகும். (குறிப்பு :—ஆனால் அஷ்டமாதிபதி மாத்திரம் லக்கினம் நீங்கலாக உள்ள மீதி கேந்திரங்களாகிய நான்கு, ஏழு, பத்து இந்த கேந்திரங்களில் இருந்தால் அஷ்டமாதிபதி தான் இருக்கும் ராசி நிலையால், ஆயுளைக் குறைக்குந் தன்மை அடைவார், லக்கினத்திலிருந்தால் ஆயுளை விருத்தி செய்யுந் தன்மை உடையவ ராவார். கீழ் குறித்த பாட்டையுங் கவனிக்கவும். இது பிறருடைய மதமாகும். இது அனுபோகத்திற்குப் பெரும்பாலும் ஒற்றுவரக் கூடியதாகும்.

"அட்டமன் ஈராறு, ஒன்பான், அணி,
திரி, ஏகம், நூறு,
எட்டுடன், பன்னொன்று, ஐந்தில் இருந்திடில்
எழுபத்தைந்து
விட்ட ஆறுமிடத்தினில் மேவிடில்
நூற்றிற் பாதி
மட்டிலா நாலு பத்து ஏழ்
வயதுமே அற்பமாகும்."

இதன் பொருள் :—ஈராறு=12, ஒன்பான்=9, அணி=2, திரி=3, ஏகம்=1. அட்டமாதிபதி, 1, 2, 9, 12-ல் இருந்தால் ஜாதகருக்கு வயது நூறு ஆகும்.

அவர் 5, 8, 11-ல் இருந்தால் வயது 75, அவர் 6-ல் இருந்தால் நூறிற்பாதி என்னும் 50 வயது அவர் 4, 7, 10-ல் இருந்தால் அற்ப வயதைக் கொடுப்பார், அற்பம் என்பது முப்பத்திரண்டு வயதிற்குட் பட்டது.

## உதாரண ஜாதகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கே | | | ல |
| | இராசி | | சு அங் |
| | (1) | | சூரி சந் பு |
| | | | சனி குரு ரா |

இவர் 27-வது வயதில் இறந்து விட்டார். ஜென்ம நட்சத்திரம் மகம் 4-ம் பாதம்

| | | | |
|---|---|---|---|
| அ | சூரி ராகு | குரு சுக் புத | |
| | இராசி | | |
| | (2) | | சந் |
| சனி | | கே | ல |

இவர் 9-வது வயதில் இறந்து விட்டார் ஜென்ம நட்சத்திரம் பூரம் 1-ம் பாதம்

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | |
| | இராசி | | ல குரு சந் |
| | (3) | | |
| புத அங் சனி | சூரி | | கே |

இவர் 8-வது வயதில் இறந்து விட்டார். ஜென்ம நட்சத்திரம் ஆயிலியம் 2-ம் பாதம்; புதன் தெசை இருப்பு சுமார் ௵ 12 - 8-மாதம். ஆறில் பாபிகள் இருப்பதையும் கடக லக்கினத்திற்கு புதன் தெசை முதல் தெசையாக வருவதையுங் கவனிக்கவும். இப்படி இருப்பதும் ஆயுளுக்கு க்ஷீணம்.

ஆகையால் அட்டமாதிபதி 4, 7, 10-ல் இருப்பது ஆயுளுக்கு விசேஷமானதே அல்ல, இது மற்றக் கிரகங்கள் கொடுக்கும் ஆயுளைக் குறைக்கவே பார்க்கும். மேலும் லக்கினத்தைக் குரு சுக்கிரன் முதலிய சுபக் கிரகங்கள் பார்ப்பது ஆயுளை விருத்தி செய்யும், மேலும் கீழ்கண்டுள்ள பாட்டில் சொல்லியதை அனுஷ்டிப்பதும் நன்மையைத் தரும்.

(1) உதித்தவன், (2) சோமன் வீட்டான், (3) ஒரெட்டோன், (4) நீலனும், (5) கதித்தவன் இருந்த வீட்டான், (6) கனகனேடு ஆறு பேரும் ஒருத்தருக் கொருத்தர் துன்பம் இல்லையாய் உறவே யாகில் விதித்தது வயது நூறு விண்ணுளோர் அறியத்தானே.

குறிப்பு:—நீலன் = சனி, கனகன் = குரு, சோமன் = சந்திரன்.

குறிப்பு :—(1) உதித்தவன் = ஜென்ம லக்கிநாதிபதி, (2) சோமன் வீட்டான் = சந்திர லக்கிநாதிபதி, (3) ஓரெட்டோன் = ஜென்ம லக்கினத்திற்கு எட்டுக்குடையவர், (4) நீலனாரும் = சனியானவரும், (5) கதித்தவன் இருந்த வீட்டான் = சனி இருந்த ராசிச்குடையவரும், (6) கனகனோடாறு பேரும் = குருவோடு ஆறுயேரும் என்பதாம்.

இந்த ஆறுபேரும், இன்னம் சிலர் மதம் பிரகாரம் லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி, சந்திரனுக்கு எட்டிற்குடையவர், லக்கினத்தையுஞ் சந்திரனையும் பார்க்கின்ற அல்லது கூடி யிருக்கின்ற சுபர், பாபர் ஆக இவர்கள் எல்லோரையுங் கவனித்து ஆயுளை நிர்ணயிப்பது நன்மையைத்தரும் என்றறியவும். சில கிரகங்களை மாத்திரம் பார்த்துவிட்டு ஆயுளை நிர்ணயிப்பது அவ்வளவு விசேஷமல்ல.

(143) கடகமும் அதின் திரிகோண ராசிகளாகிய விருச்சிகமும், மீனமும், மகரமும் அதின் திரிகோண ராசிகளாகிய ரிஷபமும், கன்னியும், ஆகிய இந்த ஆறு ராசிகள் ஜென்ம லக்கினமாகி, நவாம்ச லக்கினமும் மகரமாகி, இந்த மகர நவாம்சத்தில் பாபரிருந்தால் ஜாதகர் இரட்டைப் பிறவியாகவே பிறப்பர். மேலும் லக்கினம் தனுசு நவாம்சத்தின் கடைசி பாகத்திலும் அல்லது மகர நவாம்சத்தின் முதல் பாகத்திலும் இருந்து லக்கின நவாம்ச பாகத்தில் பாபர் இருக்கப் பிறந்தவர் இரட்டைப் பிறவியாகவே இருப்பார்

(144) ஜென்ம லக்கினம் நான்கு ஸ்திர ராசிகளாகிய ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிச்

சூரியன் சந்திரனுடைய அம்சத்திலிருந்தால் ஜாதகர் சூத்திர ஜாதியில் பிறந்தவ ராவார்.

இந்தச் சூரியன் நின்ற அம்சாதிபதி சுக்கிரனுகி. இந்தச் சுக்கிரன் சனியுடன் கூடியிருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டாலும் சூத்திர காலத்தில் பிறந்தவர் சூத்திர ஜாதியில் பிறந்தவ ராவார். இந்தச் சூரியன் ராகுவுடன் கூடியிருந்தால் ஜாதகர் சங்கர ஜாதியிற் பிறந்தவ ராவார். இந்தச் சூரியன் குருவால் பார்க்கப் பட்டுச் சூரியன் விப்பிரகாலத்தி லிருந்தால் ஜாதகர் விப்பிர குலத்திலும், க்ஷத்திரிய காலத்தி லிருந்தால் ஜாதகர் க்ஷத்திரிய குலத்திலும் பிறந்தவ ராவார்.

(145) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராவது பாவம் சிறிய தகப்பன் ஸ்தானம் ஆகும். இதற்குப் புத்திரஸ்தானம் என்பது லக்கினத்திற்கு மூன்ருவது ஸ்தானமாகும். அதாவது லக்கினத்திற்கு மூன்ருவது பாவம் ஜாதகருடைய சிறிய தகப்பனுருடைய புத்திர ஸ்தானமாகும்.

(146) வக்கினுதி யோகம் என்ற லக்கினுதி அதி யோகத்தில் பிறந்தவருக்குச் சனியும் பத்தாம்பாவாதி பதியும் ஒரே ராசியிலிருந்தால் ஜாதகர் ராஜயோக பலனை அடைந்து வீட்டில் லக்ஷிமி கடாக்ஷத்தை அடைவார். (லக்கினம் விருச்சிகமானுல் இந்த பலன் அதிகமாக நடக்கும்.)

(147) ஜென்ம லக்கினம் விரிச்சிகமாகி லக்கின பாவத்தைச் சனி பார்த்தால் சனி தெசையில் ஜாத கருக்கு விசேஷ பலன் நடக்கும். ஜாதகர் ராஜ வம்சத் தில் பிறந்தவரானுல் ஜாதகருக்கு ராஜ்ய லாபமும்,

மற்ற வம்சத்தில் பிறந்தவரானுல் ஜாதகருக்குச்சுகமும் உண்டாகும்.

(148) சூரியனுடைய அஷ்ட வர்க்கத்தில் (சமுதாயப்) பரல் இல்லாத ராசியில் சூரியன் கோச்சாரத்தில் ஒவ்வொரு வருஷமும் சஞ்சாரஞ் செய்யும்போது (அதாவது அந்த ராசிச்குறிய மாதத்தில்) ஜாதகர் சுப காரியங்களை விட்டு விட வேண்டும். இந்தப் பூஜ்யப் பரலுள்ள ராசிகளின் மாதங்கள் குரூர மாதங்களாகும். இந்தக் குரூர மாதங்களில் ஜாதகருக்குத் தேக ஜாட்டியமும் அல்லது தன நாசமும் உண்டாகும். கடன், வியாஜ்யம் காரணமாக ஜாதகர் பிரசங்கம் செய்வார், அரசாங்கத்தில் கலாப மடைவார், பரல்கள் உள்ள சுப மாதத்தில் ஜாதகர் தனலாப மடைவார் (சுப மாதங்கள் பரல எண்ணிக்கைக்குத் தகுந்தபடி அதிக சுபமாதங்கள், மத்திப சுப மாதங்கள், குறைந்த சுப மாதங்கள் ஆகும், இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் சுப அசுப மாதங்களை அறியவும்).

(149) ஜென்ம லக்கினத்திற்குப் பதினேராம் பாவாதிபதி நவாம்சக் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் ஜாதகருடைய பேத சகோதரனுடைய (அதாவது மாற்ருந்தாயின் குமாரனுடைய) ஜென்மராசி (அதாவது சந்திர லக்கினம்) இருக்கும்.

ஜென்ம லக்கினத்திற்குப் பதினேராம் பாவாதிபதி இராசிச் சக்கிரத்தில் பார்க்கும் ராசியில் அல்லது ராசிகளில் ஜாதகருடைய பேத சகோதரருடைய ஜென்ம லக்கினம் இருக்கும். (இதனல் பேத சகோதர ஸ்தானம் பதினேராமிடம் என்று எற்படுகிறது, இது 4-க்கு 4-க்கு 5-வது ஸ்தானமாகும். 4-க்கு 4-வது ஆகிய 7-வது ஸ்தானம் பேதமாதா ஸ்தானம் ஆகும்.

150) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவத்தாலும் ஒன்பதாம் பாவாதிபதியாலும் ஜாதகருடைய தகப்பனருடைய ஜென்ம ராசியை அறியவும்.

குறிப்பு :—சூரியன் நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் ஜாதகருடைய தகப்பனருடைய ஜென்மராசி இருக்கும்.

ஒன்பதாவது பாவம் இருக்கும் ராசியே தகப்பனருடைய ஜென்ம ராசி ஆகும், அல்லது ஒன்பதாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசிகளே தகப்பனருடைய ஜென்ம ராசியாகும், அல்லது ஒள்பதாம் பாவாதிபதி இராசிச் சக்கிரத்தில் பார்க்கும் ராசியே தகப்பனருடைய ஜென்ம ராசி ஆகும். ஜென்ம ராசி என்பது சந்திர லககினம் என்னும் சந்திரனிருக்கிற ராசியே ஆகும்.

(151) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் அல்லது பதினோராம் பாவாதிபதி ராசிச் சக்கிரத்தில் பார்க்கும் ராசியில், சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய தாயாருக்குக் கிலேசமும், பந்து வர்க்கத்தில் மனோ வியாக்கூலமு முண்டாம்.

(152) சந்திர லக்கினத்திற்கு எட்டா மாதிபதியின் தெசையில் சந்திர புக்தியில் ஜாதகருடைய சுய ஜெனங்களுக்குக் கெடுதியும் அபமிருத்யு பயமும், சாந்தியால் சுகமும் உண்டாகும்.

(153) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவாதிபதியின் தெசையில் குரூர மாதத்தில் குரூர புக்தி

அந்தரத்தில் ஜுரபயமும் சாந்தி செய்தால் சுகமும் உண்டாகும்.

(154) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருமிடம் மாமனர் ஸ்தானம் ஆகும். (மூன்ருமிடம் களத்திர ஸ்தானமாகிய ஏழுக்குப் பிதுர் ஸ்தானமாகிய ஒன்பதாமிடமாகும்). இந்த மூன்ருமிடத்தில் பாபர் இருந்தால் ஜாதகருக்குப் பெண்ணைக் கொடுக்கும் மாமனர் பெரிய ஆபத் தடைவார். இவ்விதம் கிரக மிருந்து மூன்ரும் பாவாதிபதி பலமுடையவராகிச் சுபாம்சத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகருடைய மாமனருக்கு மேற் சொன்ன தோஷம் நேரிடாமல் சுப பலனே உண்டாகும்.

(155) ஜென்ம லக்கினத்திற்கு ஆரும் பாவாதிபதி தெசையில் ஆரும் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருடைய அம்மானுக்குக் கெண்டமும் மரணமும் நேரிடும்.

அல்லது ஜென்ம லக்கினதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய அம்மானுக்குக் கெண்டமும் மரணமும் நேரிடும்.

(156) ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவம் தாய் பாட்டன் ஸ்தானம் ஆகும். (தாய் பாட்டன் என்ருல் ஜாதகருடைய தாயைப் பெற்ற தகப்பன், (தாய் ஸ்தானமாகிய நான்காம் வீட்டிற்குத் தகப்பன் ஸ்தானமாகிய ஒன்பதாம் வீடே லக்கினத்திலிருந்து பன்னிரண்டாவது வீடாகும்.)

(157) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாவது பாவம் ஜாதகருடைய பிதுர் பாட்டன் ஸ்தானமும், ஆகும். (பிதுர் பாட்டன் என்றால் ஜாதகருடைய பிதுரைப் பெற்ற தகப்பன்). (பிதுர் ஸ்தானமாகிய ஒன்பதாவது வீட்டிற்குப் பிதுர் ஸ்தானமாகிய ஒன்பதாம் வீடே லக்கினத்திலிருந்து ஐந்தாம் பாவமாகும்.)

(சி) தனுசு லக்கினத்திற் பிறந்தவருக்கு தாய் பாட்டன் ஸ்தானாதிபதியாகிய அங்காரகன் ஆறாவது பாவத்தில் மங்களாம்ச நாடியிலிருந்தால் ஜாதகருடைய தாய் பாட்டன் தீர்க்காயு ளுடையவர்.

(டி) தனுசு லக்கினத்திற் பிறந்தவருக்குப் பிதுர் பாட்டன் ஸ்தானாதிபதியாகிய அங்காரகன் ஆறாவது பாவத்தில் மேஷாம்சத்தில் மங்களாம்ச நாடியில் இருந்தால் ஜாதகருடைய பிதுர் பாட்டன் பிரசித்தி யுடையவர், சகோதர சகோதரியுடனும் கூடியவர், பாக்கிய முடையவர், வனாந்தர புரத்தில் வாசமுடையவர், ஆயுள் வரை சௌக்கிய முடையவர்.

(இ) தனுசு லக்கினத்தில் பிறந்தவருக்குப் பிதுர் பாட்டன் ஸ்தானாதிபதியாகிய அங்காரகன் ஆறாவது பாவத்தில் மேஷாம்சத்திலிருந்து, புதனுடன் கூடியிருந்தால் ஜாதகருடைய பாட்டன் பிருஹத் (பெரிய) பீஜம் உடையவ ராவார்.

(157) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசி ஜாதகருடைய மனைவியின் ஜென்மராசி யாகும். அல்லது,

(158) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம்பாவாதிபதி இராசிச் சக்கிரத்தில் பார்க்கும் ராசி அல்லது ராசி

களே ஜாதகருடைய மனைவியின் ஜென்ம ராசி இருக்கும்.

(159) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவம் பிரபு ஸ்தானம் ஆகும். ஒன்பதாம் பாவாதிபதி ஐந்தாம் பாவாதிபதி பத்தாம் பாவாதிபதிகளுடன் கூடி இருந்தால் ஜாதகர் நல்ல சரீரமுடையவர். அரச ராவார். அனேக குதிரை வாகன முடையவர், ராஜ சினேக முடையவர், மஹாராஜப் பிரியர், சுகி, அரச ரால் பிரபல மடைவார்.

(160) ஒவ்வொரு பாவத்திற்கும் அதனுடைய அஷ்டம பாவத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரம் செய்யும்போது அந்த அஷ்டமாதிபதியின் தெசா, புக்தியில் அந்தப் பாவத்திற் குரிய நபருக்குக் கெண்டத்தையும் மரணத்தையும் உண்டு பண்ணும்.

(161) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவாதிபதி தெசையில் ஜாதகருடைய சிற்றப்பனுக்குக் கஷ்டம் ஏற்படும். எட்டாம் பாவாதிபதியின் தெசையில் ஜாதக ருடைய தகப்பன் சகோதரிக்குத் தோஷ முண்டாகும்

(162) சந்திரனுடைய அஷ்ட வர்க்கத்தால் ஜாதக ருடைய தாயின் உடன் பிறந்தாரின் எண்ணிக்கை யும் சூரியனுடைய அஷ்ட வர்க்கத்தால் ஜாதகருடைய தகப்பனுடைய உடன் பிறந்தாருடைய எண்ணிக் கையும் (அதாவது எத்தனை பேர் மொத்தம் என்பதை யும்) அறியவும். (குறிப்பு :— எண்ணை அறியும் வழி இங்கு சொல்லப்படவில்லை. நமது ஜாதக அஷ்டவர்க்க மும் அதன் பலா பலன் நிர்ணயமும் என்ற புத்தகத் தைப் பார்க்கவும் பின்னால் வரும் அயிட்டம். நெ, 165 யும் பார்க்கவும்).

N53

(163) ஜாதகருடைய அம்மான் ஸ்தானம் ஜென்ம லக்கினத்திற்கு ஆறாவது பாவம் ஆகும்.

ஜென்ம லக்கினம் கும்பமாகி அம்மான் ஸ்தானாதிபதியாகிய சந்திரன் தன் நவாம்சத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகருடைய தாய் வமிசம் விருத்தியடையும், ஜாதகருடைய இரண்டு அம்மான்கள் யோகம் உடையவர்களாக இருப்பார்கள்.

(164) ஜாதகருடைய சிறிய தகப்பனாருடைய ஸ்தானம் ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராவது பாவம் ஆகும்.

(165) சந்திரனுடைய அஷ்டவர்க்கத்தில் சந்திரனுக்கு வரும் பரல்கள் எவ்வளவோ அவ்வளவு பேர் தாயின் சகோதரர் தீர்க்கம் என்று அறியவும், குறிப்பு :—(இந்தச் சந்திராகலா நாடியில் இதை விவரமாகச் சொல்லவில்லை. ஆனால் சந்திரனுடைய அஷ்ட வர்க்கத்தில் சந்திரன் இருக்கும் ராசிக்கு நான்காவது ராசியில் எத்தனை சமுதாய பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை பேர் ஜாதகருடைய தாயாருடன் கூடப்பிறந்தவர்கள் என்று சொல்லலாம். இதில் ஏகாதிபத்திய சோதனையான பிறகு எத்தனை பரல் அதாவது (சோத்திய பரல்) நிற்கின்றதோ அத்தனை பேர் தீர்க்காயுளுள்ளவர்கள் என்று சொல்லலாம். சந்திரனுக்கு நான்காவது ராசியில் இருக்கும் பரலைக் கொண்டு சொல்லுவது போலவே சந்திர அஷ்ட வர்க்கத்தில் லக்கினத்திற்கு நான்காவது ராசியில் இருக்கும் பரலைக்கொண்டு சொல்லுவதுமுண்டு.)

(165-எ) ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவாதிபதி நவாம்சச் சக்கரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் அல்லது பன்னிரண்டாம் பாவாதி

TAMIL NADU ARCHIVES
102365

பதி ராசிச் சக்கிரத்தில் பார்க்கும் ராசி அல்லது ராசி களில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய சந்ததிகளுக்குப்பீடை, கெண்டம், மரணம் முதலியவை நேரிடும்.

(166) ஜென்ம லக்கினாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் அல்லது ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவாதிபதி நவாம் சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசி யில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய அம்மானுக்குப் பீடை, அரிஷ்டம், கெண்டம், மரணம் முதலியவை நேரிடும். இவ்விதம் நடவா விட்டால் ஜாதகருடைய தாயின் வம்சத்தில் பிரபலமான உறவினர் நாசமும் பந்து வர்க்கத்தில் விசாரமும் உண்டாகும்.

(167) ஜென்ம லச்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய தாயாருக்கு வியாகூல மும், வம்சத்தில் உபத்திரவமும் உண்டாகும்.

(168) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதி பதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரி கோண ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது பத்தாம் பாவாதிபதியின் தெசை புக்திகளில் ஜாதகருடைய சகோதரர் சகோதரி களுக்குப் பீடை, கெண்டம் முதலியவை நேரிடும்.

(169) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதி பதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரி கோண ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ்

செய்யும்போது ஜாதகருடைய தகப்பனுருக்கு தேக ஜாட்டியம், கெண்டம் முதலானவை உண்டாகும்.

ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி இராசிச் சக்கரத்தில் பார்க்கும் ராசி அல்லது ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய தகப்பனுருக்கு ஆபத்து உண்டாகும், தாய்க்குக் கஷ்டமும் வியாக்கூலமும் உண்டாகும், தகப்பனுக்குச் சமானமான பந்துக்களுக்கும் சிற்றப்பனுக்கும் கெண்டம மரணம் முதலியவை உண்டாகும்.

(170) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பது பத்துக்குடையவர்கள் கேந்திரத்தில் இருந்து எட்டாம் பாவாதிபதியுடன் கூடி இருந்தால் ஜாதகருக்கு யோக பங்க முண்டாகும். அவர் அற்ப பாக்கியமடைவார்.

(171) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி சுய க்ஷேத்திரத்தில் நவாம்சச் சக்கிரத்தில் உச்சத்திலிருந்து இந்த நவாம்சச் சக்கிரத்தில் சுபரால் பார்க்கப்பட்டால் ஜாதகர் நித்தியம் அன்னதானம் செய்யும் புண்ணிய ஆத்துமா ஆவார், தன் பிதாவை விட அதிக பாக்கிய முடையவர்

(172) எந்த லக்கினமானுலும் எந்த நாடி அம்சமானுலும் ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் குரூரக்கிரகமிருந்தால் ஜாதகருக்கு வீடு, பூமி, முதலியவை நாசமாகும், விவாகத்திற்குப் பிறகு சுகமுண்டாகும். மேற்படி குரூரக்கிரகம் இருக்கும் ராசியின் அதிபதியின் தெசையில் ஸ்தான நாசமுண்டாகும்.

(173) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசிகள் ஜாதகருடைய மனைவியின் ஜென்ம ராசியாகும், சந்திரன் இருக்கும் ராசியைக் கொண்டும் இவ்விதமே அறியவும்.

(174) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் போது ஜாதகருடைய சிற்றப்பனுக்கு விபத்தும் தாயாதி வர்க்கத்தில் புத்திர நாசமும், தன் தகப்பனுருக்கு ஆயாசமும், சிற்றப்பனுக்குப் பீடையும் முதலியவை உண்டாகும். தோஷம் நிவர்த்தியாகச் சனிப்பிரார்த்தனைசெய்து இரும்பு பிரதிமை தானம் செய்ய வேணும்.

(175) எப்போதும் ஜென்ம லக்கினத்திற்கு ஆரும் பாவாதிபதி எட்டாம் பாவாதிபதி இவர்களுடைய வாரமும், ஆரும் பாவம் எட்டாம் பாவம் இவைகள் இருக்கும் ராசிகளின் மாதங்களும் ஜாதகருக்குக் குரூர வாரங்களும் குரூர மாதங்களும் ஆகும்.

(176) எந்த லக்கினமாய் இருந்த போதிலும் சனி கோச்சாரத்தில் எந்தப் பாவத்தில் இருக்கின்றாரோ எந்தப் பாவங்களைப் பார்க்கின்றாரோ அந்தப் பாவங்களுக்கு (அதாவது அந்தப் பாவங்களுக்கு உரியவர்களுக்கு) ஆபத்தும், மரணமும், மரணசமான கெண்டங்களும் கிலேசங்களும் உண்டாவது மன்றி, அந்தப் பாவங்களுக்கு உரிய வஸ்துக்களும் நாசமடையும்,

(177) தேகம், ஜீவன், என்று சொல்லப்பட்டவைகளில் தேக ராசியில் பாபர் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குத் தேகபீடையும், ஜீவ ராசியில் பாபர் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் பொது ஜாதகருக்கு ஜீவபாதையும், இவ்விரண்டிலும் ஏக காலத்தில் ஒரு பாபர் அல்லது இரண்டு பாபர்கள் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குப் பெரிய ஆபத் துண்டாகும். ஜீவ ராசியில் செவ்வாய் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருக்கு ஜென்ம தெசையில் ஜென்ம வருஷத்தில் மாந்த ஜுரம், ரிணபயம் கொஞ்சம் நேத்திர பீடை ஆகிய இவைகள் உண்டாகும்.

குறிப்பு :—தேகம், ஜீவன், என்பவைகளைப்பற்றி காலச்சக்கிர தெசா புக்தி கணித புஸ்தகத்தில் பார்க்கவும். இங்கு சந்திர கலா நாடியில் சொல்லப்பட்ட தேகம் ஜீவன் என்பது காலச் சக்கிர தெசையில் ஒவ்வொரு நட்சத்திரப் பாதத்திற்குரிய ஒன்பது தெசைகளில் முதலாவது ஒன்பதாவது தெசாதிபதியின் ராசிகள் அதாவது ஆரம்ப ராசி முடிவு ராசிகள் ஆகும். இன்னொரு விதமான தேகம் ஜீவன் இருக்கின்றன, அவைகளை இந்தச் சந்திர கலா நாடியில் இங்கு குறிப்பிட்ட தாகத் தோற்றவில்லை. அவைகள் அடியிற் கண்டவைகள் ஆகும்.

(ஏ) ஜீவன்:—ஜென்ம லக்கின ஸ்புடத்தை ஐந்தால் பெருக்கி வரும் தொகையுடன் ஜெனன காலத்தில் மாந்தியின் ஸ்புடத்தைக் கூட்ட வருகிற மொத்த ஸ்புடம் ஜீவன் (அல்லது பிராணன்) என்று சொல்லப்படும்.

(பி) தேகம்:— ஜெனன காலத்தில் சந்திர னுடைய ஸ்புடத்தை எட்டால் பெருக்கி வரும் தொகையுடன் ஜெனன காலத்தில் மாந்தியின் ஸ்புடத்தைக் கூட்ட வருகிற மொத்த ஸ்புடம் தேகம் என்று சொல்லப்படும்.

(சி) மிருத்யு:—ஜெனன காலத்தில் மாந்தியி னுடைய ஸ்புடத்தை ஏழால் பெருக்கி வரும் தொகை யுடன் ஜெனன காலத்தில் சூரியனுடைய ஸ்புடத் தைக் கூட்ட வருகிற மொத்த ஸ்புடம் மிருத்யு என்று சொல்லப்படும்.

(டி) ஜீவ ஸ்புடத்தையும் தேக ஸ்புடத்தையும் கூட்டி வருகிற மொத்த தொகை மிருத்யு ஸ்புடத்தை விட அதிகமாக விருந்தால் ஜாதகர் க்ஷிராயுசு என்ற பூர்ணுயுசை உடையவ ராவர்.

(இ) ஜீவன், தேகம், மிருத்யூ ஆகிய இந்த மூன்று ஸ்புடங்களேயும் ஒன்ருகக்கூட்ட வருகிற மொத்த ஸ்புட தொகைக்கு உரிய ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதக ருக்குத் தன க்ஷயம் (அதாவது தன நாசம்) உண்டா கும். இந்த ராசிக்குத் திரிகோண ராசிகளில் அல் லது இங்கு குறித்துள்ள மொத்த ஸ்புட தொகைக்கு உரிய நவாம்ச ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ் சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு மரணம் ஏற்படும்.

(எப்) திரிகோணம் என்ருல் சிலர் லக்கினத் திற்கு ஐந்தாவது ஒன்பதாவது ராசி அல்லது பாவம் என்றும் லக்கினம் அல்லவென்றும் சொல்லக்கூடும், ஆனல் இந்த சந்திர கலா நாடியில் திரிகோணம் என் ருல் லக்கினத்திற்கு ஒன்று, ஐந்து, ஒன்பது, ஆகிய

மூன்று ராசிகள் அல்லது பாவங்கள் குறிக்கப்பட்டுள்ளன என்று அறியவும்.

(177) ஜென்ம லக்கினாதிபதி தெசையில் லக்கினாதிபதிக்கு நைசர்க்கிக சத்துரு கிரகத்தின் புத்தியில் ஜாதகருக்கு அதிக கிலேசமும், நைசர்க்கிக மித்துரு கிரக புத்தியில் ஜாதகருக்குத் தன வரவும், நைசர்க்கிக சமக்கிரக புத்தியில் சுபம் அசுபம் இரண்டும் சமமாகவும், தற்காலிக மித்திர கிரக புத்தியில் அதிக சுபமும், சுபருடன் கூடிய தற்காலிக மித்திர கிரகத்தின் புத்தியில் சுபமும் ஜாதகருக்கு உண்டாகும்.

(178) ஜென்ம லக்கினத்திற்கு ஆறும் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருடைய தகப்பனாரின் சிநேகிதர்களுக்குக் கிலேசமும் கெண்டமும் மரணமும், ஜாதகருடைய மூத்த சகோதரருக்குக் கொஞ்சம் பீடையும் பந்துவர்க்கத்தில் உபத்திரவமும் உண்டாகும்.

(179) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவாதிபதி இருக்கும் ராசியின் திரிகோண ராசிகளில் அல்லது இரண்டாம் பாவத்தின் திரிகோண ராசியில் அல்லது இரண்டாம் பாவாதிபதி பார்க்கும் ராசி அல்லது ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய மனைவிக்குக் கெண்டம், மரணம் முதலியவைகள் நேரும்.

(180) சூரியனுடைய அஷ்ட வர்க்கத்தில் சூரியன் இருக்கும் ராசியில் எத்தனை சமுதாயப் பரல்கள் இருக்கின்றனவோ அத்தனையாவது கெற்பமாக ஜாதகர்

ஜெனிப்பார். குறிப்பு :— சூரியனுடைய வலிவை அனுசரித்து இந்த எண்ணை ஒரு மடங்காவவோ, ஒன்னரை மடங்காவவோ, இரண்டு மடங்காகவே. மூன்று நான்கு மடங்குகளாகவோ அதிகப்படுத்திக் கொள்ளவும்.)

(181) சந்திராதி யோகத்தில் பிறந்தவருக்குச் சந்திரனுக்கு ஐந்தில் பாபரிருந்தால் ஜாதகருக்கு முப்பது வயதிற்குமேல் பாக்கிய விருத்தி உண்டாகும், ஜாதகர் யோகவானுகவும் போகவானுகவும் ஆவார்.

(182) ஜென்ம லக்கினத்திற்கு ஏழாம் பாவத்தில் குரு இருந்தாலும், சந்திரன் க்ஷய அவஸ்தையில் இருந்து சனியால் பார்க்கப்பட்டாலும் ஜாதகர் மூல காச நோய் உடையவர்.

(183) ஜென்மலக்கினத்திற்குக் கேந்திர கோணங் களில் குரு இருந்தால் ஜாதகருடைய தாய் தகப்பன் இவர்களுக்குப் பொதுவாக ஆயுள் அதிகரிக்கும்.

(184) ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாம் பாவத்தில் குரு சுவக்ஷேத்திரத்திலிருந்து நான்கு கிரகங்களால் கூடியிருக்கப் பட்டாலும் பார்க்கப்பட்டாலும் ஜாதக ருக்கு இந்திரயோகம் உண்டாகிறது, இந்த யோகத் தால் ஜாதகர் கெற்பச் சீமானுவார், மகாயோகி

(185) ஜென்மலக்கின பாவாதிபதி ஒன்பது பதி ஞென்றுக்குடையவர்களுடன் கூடிப் பத்தாம் பாவாதி பதியால் பார்க்கப்பட்டால் ஜாதகருக்கு இன்னொரு விதமான இந்திரயோகம் உண்டாகிறது, இந்த இந்திர யோகத்திஞல் ஜாதகர் யோகமுடையவர், ராஜவல்லபர், எப்போதும் தர்மத்துடன் கூடியவர், குபேரனுக்குச்

சம மானவர், பிரகாரம், கோபுரம் முதலியவற்றிற்குத் தர்மம் செய்பவர்.

(186) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகருக்குக் காலராவினால் பயமுண்டாகும், அதிசாரபீடையும், ஸன்னிபாத ஜுரத்தால் கொஞ்சம் பயமும் உண்டாகும்.

(187) சூரியன் சனியால் பார்க்கப்பட்டால் ஜாதகருடைய தகப்பன் எதிரிடையான சத்துருக் கூட்டமுடையவர், சங்கீத சாகித்தியம் அறிந்தவர்.

## அவதார யோகம்

(188) ஜென்ம லக்கினத்திற்குக் கேந்திரத்தில் புதனிருந்து சூரியனுக்கும் சந்திரனுக்கும் கேந்திரத்தில் செவ்வாயிருந்தால் அவதாரயோகம் என்ற ஒரு வித யோகம் உண்டாகும். இந்த யோகத்தில் பிறந்தவர் ஸ்ரீவஜ்ஜிரம், சங்கம், அங்குசம், தாமரை, ஸ்ரீசக்கிரம், தண்டம் முதலிய ரேகைகளைக் கால்கைகளில் உடையவர், மார்பில் ஸ்ரீவத்ஸம் என்னும் மருவுடையவர், காத்திரமான புஷ்டியுமுடைய தேகத்தை உடையவர், ஸ்ரீமான், தர்மம் செய்பவர், மகா கீர்த்தியுடையவர், தானம் செய்பவர், எல்லா ஜீவன்களிடத்திலும் உண்மையான தயையுடையவர், விரதங்களை அனுஷ்டிப்பவர் வாச்சாலகர் காலக் கியானியு மாவார்.

## ஹரிஹரப் பிரம்ம யோகம்

(189) சுக்கிரன் கோபுராம்சத்திலும், குரு பாராவதாம்சத்திலும் இருந்து சந்திரனும் பாராவதாம்சத்திலிருந்தால் ஜாதகருக்கு ஹரிஹரப் பிரம்ம யோகம் என்ற ஒருவிதமான யோகம் உண்டாகின்றது. இந்த

யோகத்தால் ஜாதகர் பாக்கியம், ஆரோக்கியம், தன தான்ய சமுர்த்தியும் அடைவார், லோகத்தில் பிரதான மான புருஷராகவும், ராஜாக்களை ஜெயிப்பவராகவும், ஜெய முடையவ ராகவும், கலியாண வைபவங்க ளுடை யவ ராகவும், தாமரை இதழ் போன்ற கண்களை யுடை யவ ராகவும், நல்ல குணம் நிறைந்தவராகவும், போக்தா வாகவும், சகல பந்து ஜனங்களால் கொண்டாடப் பட் டவ ராகவும் ஆவார், கைகால்களில் சக்தியுடையவர், மிருதுவான தேகமுடையவர், காமாதுரர், யோகி,பிரக்தி யாதி உடையவர், சில பூமிகளுக்கு நாதனுவார், பல்லக் குடையவர், மகா தானஞ் செய்பவர், காலத்தை அறி பவர், தாமரையின் நிறம்போன்றவர். வெகு ஆயுசுடை யவர், தேவப்பிரியர், பக்திமான், சந்திரர் சூரியர் உள் ளளவும் பூமியில் விபவ முள்ளவர், கீர்த்திமானுவார்.

### லக்ஷிமி யோகம்

(190) பாராவதாம்சத்தில் குருவும் ஜென்மலக்கினத் திற்குப் பத்தாம்பாவாதிபதியாகிய சந்திரனும் இருந்து, கோபுராம்சத்தில் சுக்கிரனும் இருந்தால் லக்ஷிமி யோ கம் என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது.

அல்லது பாராவதாம்சத்தில் சூரியன் இருந்து பாராவதாம்சத்தில் இருக்கப்பட்டச் சந்திரனல் சூரியன் பார்க்கப்பட் டிருந்தாலும் கூடப்பட் டிருந்தாலும், அப் போது ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவத்தில் சுபரிருந்தால் லக்ஷிமி யோகம் உண்டாகின்றது.

இந்த லக்ஷிமி யோகத்தில் பிறந்தவர் மேன்மை யான குணங்க ளுடையவர் வெகு தேசங்களுக்கு நாதர், வித்தையும் மகாகீர்த்தியும் உடையவர், மனதிற்கு ரம்மியமாக விருப்பார், திக்குகள் எல்லாம் பரவப்பட்ட

கீர்த்தியை உடையவர், அரசர்கள் எல்லாம் வணங்கு பவர், ராஜாதிராஜர், அனேக மனைவி புத்திரர்கள் உடையவர், மூன்று லோகங்களிலும் கீர்த்தியுடையவர் துதி பாடுதலுக்குரிய குணமுடையவர், தேவப் பிராம் மண சாதுக்களைப் பூஜிப்பவர், தேவாலய ஸ்தாபனஞ் செய்பவர், பரதாரத்தினிடம் மனதை வைப்பவர், சர் வோபகாரி, மகான், குணக்கடவுள், தானத்தில் நல்ல கைகளை உடையவர், புத்திமான் ஆவார்.

## குபேர யோகம்

(191) (ஏ) ஜென்மலக்கினத்திற்குப் பத்தாம் பாவாதி பதி கேந்திர கோணத்தில் அல்லது நான்காம் பாவத் தில் இருந்தால் குபேர யோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது. ஜாதகர் குபேரனுக்குச் சமமானவர், ராஜாக்களுக் கெல்லாம் ராஜாவாக ஆகி யானை குதிரை உடையவர், மனைவி புத்திரன் உடையவர், ஜனநாயகர் நர்த்தனம் பாட்டு முதலிய விநோதங்க ளுடையவர், ஐந்தாம் வயதிற்குப் பிறகு அல்லது பதினாறு வயதிற்கு மேல் ராஜயோகத்தையும் ராஜ முத்திராதி காரத் தையும் அடைவர், அதிக சம்பத்தும் அடைவார்.

## குபேர யோகம்

(பி) (பாவங்கள் நான்கிலும் அதாவது ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இந்த நான்கிலும்) பலமானக் கிரங்கங்கள் இருந்தாலும், அல்லது இவர்கள் இரண்டு, ஒன்பது, பத்து, பதினொன்றுக் குடையவர் களுடன் கூடியிருந் தாலும், அல்லது இரண்டு, ஒன்பது, பத்து பதி னொன்று இந்தப் பாவங்களில் இந்தப் பாவாதிபதிகள்

பலிஷ்டராக இருந்தாலும் குபேர யோகம் உண்டா கிறது. (குறிப்பு:—பலமான கிரகங்கள் என்றால் கேந்திர கோணாதிபதிகள் என்று அர்த்தங் கொள்ள லாம்.) இந்தக் குபேர யோகத்தில் பிறந்தவர் சம்பூர்ண மான சம்பத்துடன் கூடி குபேரனைப் போல வாழ்வார்.

## காகள யோகம்

(192) ஜென்ம லக்கினாதிபதி இருக்கும் ராசி நாதன், இந்த ராசி நாதன் இருக்கும் ராசி நாதன் ஆகிய இவர்கள் இருவரும் ஜென்ம லக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் கேந்திரத்தில் இருந்தால் காகள யோகம் என்ற ஒரு விதயோகம் உண்டா கின்றது. இந்த யோகத்தில் பிறந்தவர் மகானாவார் ஜெயத்துடன் கூடினவர், தானஞ் செய்பவர், காமி யோகத்துடன் கூடியவர், இருபத்தெட்டு வயதிற்கு மேல் வெகு கீர்த்தி உடையவர், வித்தியா வாதம் செய்யும் விநோத கோஷ்டியை ரஸிப்பவர், ஸ்திரீ களுக்குத் தகுந்த நாயகர், சௌபாக்கியம் புத்திரர், மித்திரர், பந்து ஜனம், தனம், முதலியவை உடை யவர், தர்மஞ் செய்யும் அரசனும் மண்டலேசுரரும் ஆகி, துலாதானம் மண்டலதானம் முதலிய வைகளைச் செய்வார், மிக்க உற்சாக முடையவர்.

## சங்க யோகம்

(193) (எ) ஜாதகர் சுக்கில பட்சத்தில் பகலில் பிறந்து ஜென்ம லக்கினத்திற்குக் கேந்திரத்தில் சந்திரன் இருந்து லக்கின பாவாதி ராகுவுடன் கூடினாலும்,

(பி) அல்லது ஜென்ம லக்கினத்திற்கு மூன்று, நான்கு, ஐந்து இந்தப் பாவங்களில் சுபக்கிரகங்கள் இருந்து ஐந்தாவது பாவத்தில் பாபரிருந்தாலுங் கூட, சங்க யோகம் என்ற ஒரு வித யோகம் உண்டாகும். இந்தச் சங்க யோகத்திற் பிறந்தவர் ஸ்ரீமான், தெளிந்த அறிவுடையவர், வேதாந்தத்தை அறிவார், தர்மிஷ்டர், லோகத்தில் வெகு நாயகனாகி அரசர்களுக்கு மேலாகவும் சூரியனுக்குச் சமதேஜஸுடையவராகவும், வேறு அரசர்களோடு திக்குகளுக்குச்சென்று துதிபெறுபவராகவும், நல்ல அழகுள்ள ஸ்திரீகளுக்கு எப்போதும் நாயகனாகவும். அறிவாளியாகவும், சில பூமிகளில் அல்ப புண்ணிய முடையவராகவும், நீண்ட மெல்லிய தேக முடையவ்ராகவும் ஆவார், இந்தக் கிரக யோகத்துடன் ஜென்ம லக்கினம், மனோஹராம்சம் என்ற நாடி அம்சத்திலும் இருக்கப் பிறந்திருந்தால் ஜாதகர் மேற்சொல்லிய குணங்களுடன் இருப்பது மன்றி மகாதீரனாகவும் இருப்பார்.

## பேரி யோகம்.

(194) சனிக்கு ஆறாவது, எட்டாவது பாவங்களில் செவ்வாய் இருந்து அல்லது செவ்வாய்க்கு ஆறாவது எட்டாவது பாவங்களில் சனி இருந்து, குருவுக்கு ஆறாவது எட்டாவது பாவத்தில் சூரியன் இருந்தால் பேரி யோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகும். இந்தப் பேரி யோகத்தில் பிறந்தவர் வாத்திய கோஷ்டம், யானை, குதிரை, வேலை யாட்கள், முதலிய கோஷ்டங்கள் உடையவராயும், நல்லவர்களால் துதிக்கப்பட்டவராயும், தீர்க்காயுசுடையவராயும், அரசர்களால் துதிககப்பட்ட அரசராகவும் ஆவார். (குறிப்பு :— இந்தக் கிரக அமைப்பைப் பாவச் சக்கிரத்தில் பார்க்க

வேணுமே தவிர ராசிச் சக்கரத்தில் பார்க்கக் கூடாது. ஏனென்றால் இராசிச் சக்கரரீதியாய் இவ்வித கிரக அமைப்பு ஒருநாள் முதல் ஒரு மாதம் வரையிலும் இருக்கக்கூடும். இந்தக் காலத்திற்குள் பிறந்தவர்களுக்கு எல்லாருக்கும் இந்த பேரி யோகம் இருக்கிறபடியால், இந்தக் காலத்திற்குள் ஒரு ஏழை ஒரு தரித்திரன் கூட பிறந்திருக்க மாட்டார் என்று எண்ணுவது சாத்தியம் அல்ல, ஆதலால் இந்தக்கிரக அமைப்பைப் பாவச்சக்கிரத்தைக் கொண்டு பார்க்க வேணும். மேலும் இந்தக் கிரகங்கள் எல்லாம் ஜென்ம லக்கினத்திற்கும்கூட நல்ல ஸ்தானங்களில் இருக்க வேணும் என்பதும் ஏற்படுகிறது.)

(195) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியிலிருந்து புத்திர காரகன் (அதாவது குரு) நவாம்சச் சக்கிரத்தில் எந்த ராசியில் இருக்கின்றாரோ அந்த ராசி வரையிலும் எண்ண வரும் தொகைப்படி ஜாதகருக்குச் சந்ததிகள் உண்டாகும். இதற்கு இந்தக் கிரகங்கள் இருக்கும் பலத்தையும் யோசித்து சந்ததியின் எண்ணை அறியவேணும்,

## மத்ஸிய யோகம்

(196) ஒன்பதாம் பாவாதிபதி சுவ க்ஷேத்திரத்தில் பலத்துடன் இருந்து, நவாம்சச் சக்கிரத்தில் சுக்கிரன் அல்லது குருவின் ராசியில் (அதாவது ரிஷபம், துலாம், தனுசு, மீனம் இந்த ராசிகளில்) இருந்தால் மத்ஸிய யோகம் என்கிற ஒருவித யோகம் உண்டாகின்றது. இந்த யோகத்திற் பிறந்த ஜாதகர் காலத்தை அறிந்தவர், கருணாநிதியா யிருப்பார், ஸ்திரீகளுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவர்.

ஸ்திரமான புத்தியுடையவர், மனோகரமான சரீர முடையவர், வித்தை விநோதம் இவைகளில் பிரிய முடையவர், புத்திரன் மனைவி இவர்களுடன் கூடியவர், அனேக தனமுடையவர், எப்போதும் அரசர்களால் சன்மானிக்கப்படுபவர், தேசத்தில் வைபோக முடையவர், ஆவார்.

(197) ஜென்ம லக்கினத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு முதலிய பாவாதிபதிகள் நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் அதிபதிகள் சுபர்களானால், ஜாதகர் சிம்மத்தைப்போல பார்வை யுடையவரானதால் அவரைப்பார்க்கும் அவருடைய சத்துருக்கள் சிம்மத்தைக் கண்டு நடுங்குவதுபோல் நடுங்குவார்கள்.

(198) ஜென்ம லக்கினத்திற்கு ஆறும் பாவாதிபதி குருவாகி இவர் சுவ க்ஷேத்திரத்தில் பலத்துடன் இருந்து சுபாம்சத்தில் சுபருடன் கூடியிருந்தால் ஜாதகர் அரோக (அதாவது ரோகமில்லாத) திடகாத்திர ராவார்.

(199) ஜென்ம லக்கினாதிபதி, ஜென்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி தசமாதிபதி ஆகிய இம்மூவரும் ஜென்ம லக்கினத்திற்குக் கேந்திரம், லாபம், திரிகோணம் ஆகிய இந்த பாவங்களிலிருந்து இவர்களை விட சனி பலவானாகி இருந்தால் ஜாதகர் பூர்ணாயுள் உடையவ ராவார்.

(200) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்து, எட்டாம் பாவத்தில் சனி இருந்து, இந்தச்சனி சுபாம்சத்தில் அல்லது தன் அம்சத்திலேயே இருந்தால் ஜாதகருக்கு அறுபத்திரண்டு வயது உண்டாகும்.

(201) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவாதிபதி ராகுவுடன் கூடியிருந்து, லக்கின பாவத்தில் செவ்வாய் இருந்து, எட்டாம் பாவத்தில் சனி இருந்தால் ஜாதகர் மத்திம ஆயுள் உடையவராவார்.

## ருத்ராஸன பதயோகம்

(202) ஜென்ம லக்கினத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு இந்தப் பாவங்களில் இருப்பவர்கள் தங்கள் தங்களுடைய உச்ச ராசிக்கு ஷஷ்டாஷ்டமங்களில் (அதாவது 6, 8-ல்) இருந்து ஜென்ம லக்கினராசியில் உச்சத்தை அடையும் கிரகம் லக்கினத்திலேயே இருந்தாலும் அல்லது லக்கினத்திற்கு ஆறு எட்டில் இருந்தாலும் ருத்ராஸன பதயோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகும். இந்த யோகத்திற் பிறந்த ஜாதகர் ஸார்வ பௌமத்துவம் அடைந்து ஜெனன காலம் முதல் மரண பரியந்தமும் பாக்கியம் உடையவராகவும், ராஜ்யாதிபத்திய சௌக்கியமும், பதினாறு வயதிற்குப் பிறகு சுகமும் உடையவராக இருப்பார் என்று யவனர் முதலான முன்னோர்கள் கூறி இருக்கின்றனர் என்று இந்தச் சந்திர கலா நாடியில் சொல்லப்பட்டிருக்கிறது.

## கர்ம சாம்ராஜ்ய யோகம்

(203) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி கேந்திரத்தில் இருந்து, இரண்டு பதினொன்று பாவங்களுக் குடையவர்களால் பார்க்கப்பட்டால் சர லக்கினத்தில் பிறந்தவர்களுக்குக் கர்ம சாம்ராஜ்ய யோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது. இந்த யோகத்திற் பிறந்தவர் தனவான், பிரதாபமுடையவர், கொண்டாடப்பட்ட கீர்த்தி வெகுமானம்,

பூஜை, சன்மார்க்க விருத்தி, நன்மார்க்கம், ஆகிய இவைகளுடையவர், சத்துருக்களாலும் அரசர்களாலும் சேவிக்கப்பட்டவர், எப்போதும் ராஜ காரியத்தில் சமர்த்தர், நல்ல ஆச்சார புத்தியுடையவர், ஆவார்.

## அகண்ட சாம்ராஜ்ய யோகம்

(204) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவாதிபதி, ஒன்பதாம் பாவாதிபதி, பதினோராம் பாவாதிபதி இவர்கள் சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருந்து, இரண்டு, ஐந்து, பதினொன்று இந்தப் பாவங்களில் குரு இருந்தால் அகண்ட சாம்ராஜ்ய யோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகும். இந்த யோகத்திற் பிறந்த ஜாதகருக்கு யானை, குதிரை, பல்லக்கு முதலியவை உண்டு, இவர் பூமி, துர்க்கம் (மலை) சமுத்திரம், ஜனக்கூட்டம் இவைகளுக்கு அதிபதியாவர், நல்ல மனைவி உடையவர், ஜனபதி, போகசாலி, அன்னிய ஸ்திரீகளிடம் மனதுடையவர்.

இவ்விரண்டு வித சாம்ராஜ்ய யோகத்தில் பிறந்தவர் ஜய புருஷராவார், கீர்த்திமானாவார், தர்மத்திற்கு இருப்பிடம் ஆவார், பதினாறு வயதிற்குமேல் சுதந்திரனாவார், ராஜலாபமுடையவ ராவார்.

## ஹம்சகளா நிதி யோகம்

(205) ஜென்ம லக்கினாதிபதி கேந்திர பாவத்தில் இருந்து, குரு, சந்திரன், இவ்விருவர்களாலும் பார்க்கப் பட்டால் சர லக்கினத்திற் பிறந்தவருக்கு ஹம்சகளாநிதி என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது. இந்த யோகத்திற் பிறந்த ஜாதகருடைய தகப்பன் மகாதானஞ் செய்யும் கைகள் உடையவர், லோகத்தில் பிரசித்தமான நற்குண முடையவர், தன் பந்துக்

களை ரக்ஷிப்பவர், அதிக விசாலமான கண்களை உடையவர், கைகால்களில் மத்ஸிய ரேகைகள் உடையவர். (இங்கு ஜாதகரைப்பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லை)

(206) இராகு சுபக்கிரகத்துடன் கூடியிருந்து, இன்னம் ஒரு சுபக் கிரகத்தால் கூடப்பட்டாலும் அல்லது பார்க்கப்பட்டாலும் ஜாதகர் மிக்க விசேஷமான தனலாப முடையவர், தன் ராஜ்யத்தில் சுகம் அடைவார். இராகு தெசாபுக்திகளில் இந்தப் பலன்கள் உண்டாகும். (குறிப்பு :—இதற்கு ராகு நல்ல பாவத்தில் இருக்கவேணும்)

## சாமர யோகம்

(297) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவத்தில் ஜென்ம லக்கினாதிபதி இருந்து, லக்கினத்திற்குப் பத்தாம் பாவத்தில் புதன் இருந்து, சூரியன் வர்க்கோத்தமத்தில் இருந்தால் சாமர யோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது. இந்த யோகத்திற், பிறந்த ஜாதகர் திக்குகளெல்லாம் கீர்த்தி யுடையவர், அரசர்களுக்கெல்லாம் அரசர், கிரீடம், மணிமகுடம் முதலிய சகல பாக்கியமும் சௌக்கியமும் உள்ளவர், தீர்க்காயுளுடையவர், புத்திமான், தனமுடையவர், தர்மிஷ்டர், வேதம் அறிந்தவர், சுகம் உள்ளவர் ஆவார்.

(208) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவாதிபதி இவர்கள் இருவருங் கூடியிருந்து, நான்காம் பாவாதிபதி, பத்தாம் பாவாதிபதி இவர்களால் பார்க்கப் பட்டால் ஜாதகர் பாக்கிய யோகம் அடைவார், தடாகம், கோபுரம் தேவோற்சவம் முதலிய தர்ம கைங்கரியங்களைச் செய்

பவர், பந்துக்களின் கலியாண சம்பத்துடன் கூடின வர், எப்போதும் தானம் தர்மம் செய்பவர், தேவப் பிராம்மண பூஜை செய்பவர், திவ்விய க்ஷேத்திர சஞ் சாரம் உடையவர், ஞானம், பக்தி இவை விசேஷமாய் உடையவர், புராணக் கதைகளைக் கேழ்பவர்.

## கூர்ம யோகம்

(209) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ருவது பதினே ராவது பாவங்களில் குரு சுவக்ஷேத்திரத்தில் பலத் துடன் இருந்து ஜென்ம லக்கினுதிபதி பதினோாம் பாவத்தில் இருந்தால் கூர்ம யோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது.

மேலும் ஜென்ம லக்கினுதிபதி பதினோாம் பாவத் திலிருந்து, இந்த பதினோாம் பாவாதிபதி சர ராசியில் இருந்தாலும் அல்லது ஸ்திர ராசியில் ஸ்திர நவாம்சத் திலும் இருந்து குரு சுக்கிரர் கூடி இருந்தாலும், அல் லது குருவால் சுக்கிரன் பார்க்கப்பட்டிருந்தாலும் கூர்ம யோகம் உண்டாகின்றது.

இந்தக் கூர்ம யோகத்திற் பிறந்த ஜாதகர் பூமியில் கொண்டாடப்பட்ட கீர்த்தி உடையவர், ராஜாக்களால் பூஜிக்கப்பட்டவர், தர்மாதிகமும் சத்துவ குணமும் உடையவர், நித்திய சுகி, அதிகாரஞ் செய்பவர், ஸ்ரீ மான் ஆவார்.

(210) ஜென்ம லக்கினுதிபதியைக் குரு பார்த்தால் ஜாதகர் தேவாலய சமீபத்தில் கிழக்கு மேற்கு வீதியில் தேவப் பிரார்த்தனையால் சிவானுக்கிரக காரணமாகப் பிறந்தவர் ஆவார்.

(211) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, ஒன்பது, பத்து, பதினொன்று இந்தப் பாவங்கள் நான்கிலும் பல முள்ள கிரகங்களிருந்தால் ஜாதகர் சம்பூர்ணமான திரவியமுடையவர், குபேரனுக்குச் சமமானவர், இரண்டாம் பாவத்திற்குரிய ராசி தேசத்திலாவது, இரண்டாம் பாவாதிபதிக்குரிய தேசத்திலாவது, சர்வாஷ்டக வர்க்கத்தில் எந்தத் திக்கில் அதிக பரல் உள்ளதோ அந்தத் திக்கிலாவது விசேஷ தனலாபமும் உண்டு, இரண்டாம் பாவாதிபதி வக்கிரமாயிருந்தால் எல்லா திக்குகளிலும் அந்த தேசத்தில் தன விருத்தியுண்டாகும்.

(212) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணராசியில் அல்லது பதினோராம் பாவாதிபதியால் பார்க்கப்பட்ட ராசிகளிலாவது குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குத் தன லாபம் உண்டாகும்.

(213) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இந்த பாவாதிபதிகள் நவாம்சச்சக்கிரத்தில் இருக்கும் ராசியில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது அவரவர்களுடைய தெசையில் ஜாதகருக்கு விசேஷ பாக்கியமும் தனலாபமும் உண்டாகும்.

(214) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தில் குரூரக் கிரகங்கள் இருந்தால் ஜாதகர் சௌரியம், ஆயுசு, தனம் இவற்றை அடைவார்

(215) ஜென்ம லக்கினத்திற்கு மூன்றும் பாவத்தைச் செவ்வாயாவது சனியாவது பார்த்தால் ஜாதகருக்குச்

சகோதர உற்பத்தி நாசமடையும். இதில் சந்தேகமே இல்லை. மூன்ரும் பாவம் ஆண் ராசியானல் ஆண் சகோதரமும், பெண் ராசியானல் பெண் சகோதரமும் நாசம் அடையும். இதற்கு மேலும் பாவேசனையும் காரகனையும் கூடக் கவனிக்கவும்.

(216) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவத்தில் அங்காரகன் இருந்து, மூன்ரும் பாவம் ஆண்ராசியானல் ஆண் சகோதர்கள் ஜீவித்திருந்தாலும், பெண் ராசி யானல் பெண் சகோதரர்கள் ஜீவித்திருந்தாலும், பிறகு இவர்கள் இருப்பதில்லை, அதாவது இவர்கள் ஜாதகருக்கு முன்னமே இறந்து விடுவார்கள், சகோதர பாவாதிபதி, சகோதர காரகன் இவர்களுடைய அம்ச சங்கியையால் (எண்ணல்) சகோதர நிச்சயத்தை அறிய வேணும்.

(217) சூரியன் சந்திரன் இவர்கள் ஒரே (ராசியின்) அம்சத்தில் இருந்தால் (அதாவது ஒரே நட்சத்திர பாதத்தில் இருந்தால்) ஜாதகர் இரண்டு தாய்களுடையவர், (அதாவது மாற்ருந்தாய் உடையவர்), பேத (மாற்ருந்தாய்) சகோதரருடையவர் ஆவார்.

(218) ஜென்ம லக்கினதிபதி ஒன்பதாம் பாவாதிபதிகள் இவர்கள் குரு சுக்கிரர்களுடன் கூடியிருந்தாலும் குரு சுக்கிரர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகர் ராஜ பூஜித ராகவும், மேலான கொடையாளியாவும், சர்வ ஐஸ்வரியங்கள் உடையவராயும் இருப்பார் (இதற்கு குரு சுக்கிரன் நல்ல ஆதிபத்தியம் அடைந்திருப்பது விசேஷம்).

(219) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதியாவது, ஐந்தாம் பாவாதிபதியாவது குருவுடன்

கூடியாவது குருவால் பார்க்கப்பட்டாவது இருந்தாலும், அல்லது இந்த பாவாதிகள் வைஷேஷிகாம்சத்தில் பலமுள்ளவர்களாய் இந்தாலும் ஜாதகர் சர்வ பாக்கியங்களுடனும் வாகனங்களுடனும் கூடி இருப்பார்.

(220) ஜெனன ஜாதகத்தில் சந்திரன் இருக்கின்ற ராசிக்கு அஷ்டமாதிபதியின் தெசையில் பாபருடைய புக்தியில் ஜாதகருக்கு அதிக கிலேசமும் மாதுர் அரிஷ்டமும் உண்டாகும்.

(221) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணத்தில் அல்லது பத்தாம் பாவாதிபதி பார்க்கும் ராசி அல்லது ராசிகளின் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருடைய தாயாருக்குக் கெண்டம் மரணம் முதலியவை உண்டு.

(222) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவாதிபதி பலவானுகிப் பதினோராம் பாவத்தில் இருந்து, பத்தாம் பாவாதிபதி ஐந்தாம் பாவத்தில் இருந்தால் ஜாதகருக்கு ராஜானுக் கிரகம், நல்ல வாகனம் யானை வரையுள்ள லக்ஷிமிகரமான பாக்கியமும், மண்டல பதியால் சன்மானமும், யானை குதிரை முதலிய தன லாபமும் சொர்ண வஸ்திர பூஷண லாபங்களும், வெகு வாகன லாபமும் உண்டாகும்.

(223) ஜெனன ஜாதகத்தில் குரு இருக்கும் ராசியிலும், குரு இருக்கும் ராசியிலிருந்து ஐந்தாவது ராசியிலும் குருவினுடைய அஷ்டவர்க்கத்தில் எத்தனை பரல்கள் இருக்கின்றனவோ அத்தனை பேர்

சந்ததிகள் ஜாதகருக்கு உண்டாவார்கள். இந்த ஸ்தானங்களைப் பாவர் பார்த்தால் சந்ததி மறித்து விடும்.

(224) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் பாவாதிபதி நவாம்சச் ச்க்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணராசிகளில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குச் சந்ததி உண்டாகும்.

(225) ஜென்ம லக்கினத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு இந்தப் பாவாதிபதிகள் நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசி அதிபதிகள் சுபர்களானல் ஜாதகருடைய சத்துருக்கள் ஜாதகரை நினைத்து அலறுவார்கள், சொர்ப்பனத்திலும்( அதாவது சிம்ம சொர்ப்பனம் என்கிற சொர்பனத்திலும்) அலறுவார்கள்.

(226) ஜென்ம லக்கினத்திற்கு ஆறும் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோணராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குத் தேக ஜாட்டியமும் அதிக கிலேசமும் மிக்க பயமும் உண்டாகும்.

(227) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவம் ஜாதகருக்கு இரண்டாவது தார ஸ்தானம் ஆகும்.

(228) ஜென்ம லக்கினத்திற்கு எந்தப் பாவத்தின் திரிகோணத்திலாவது அல்லது அந்தப் பாவத்தின் அஷ்டமத்தின் திரிகோணத்திலாவது சனி இருந்தால் அந்தப் பாவம் நாசம் அடையும்.

(229) ஜென்ம லக்கினத்திற்கு எட்டு, பத்து, லக்கினம் ஆகிய இந்தப் பாவாதிபதிகள் கேந்திரம்,

லாபம், திரிகோணம் ஆகிய இவைகளில் இருந்து சனியும் பலவானாய் இருந்தால் ஜாதகருக்குப் பூர்ணாயுளுண்டாகும்.

## சாம் ராஜ்ய யோகம்

(230) (ஏ) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாம் பாவாதிபதி ஒன்தாம் பாவாதிபதி, ஐந்தாம் பாவாதிபதி இவர்கள் லக்கினாதிபதியுடன் கூடி பதினோராம் பாவத்திலிருந்தாலும்,

(பி) அல்லது ஐந்தாம் பாவத்தில் பத்தாம் பாவாதிபதி இருந்து, இந்தப் பத்தாம் பாவாதிபதியால் ஐந்து, எட்டு, ஒன்பதாம் பாவாதிபதிகள் பார்க்கப்பட்டால்.

அப்போது சாம்ராஜ்ய யோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகிறது. இந்த யோகத்திற் பிறந்த ஜாதகர் பதினாறு வயதிற்குமேல் சுகம் அடைவார், அதிக சம்பத்துடையவர், போகி, பதினாறு வருஷ காலம் யோகம் அடைவார், இந்தப் பதினாறு வருஷ காலம் முடியுஞ் சமயத்தில் ஜாதகருக்கு அப மிருத்யு கெண்டம் ஏற்படும்.

(231) மாந்தி என்னும் கிரகத்துடன் ராகு கூடி இருந்தால் ராகு தெசையில் குரூர புக்தியில் ஜாதகருக்கு விசேஷ பயமும், ராகு தெசையில் ராகு புத்தியில் சுப அசுப பலன்கள் இரண்டும் சமமாகவும் ஜாதகருக்கு நடக்கும்.

(232) ஜெனன ஜாதகத்தில் மூன்று கிரகங்கள் ராசிச் சக்கரத்தில் உச்ச ராசியிலிருந்து, அம்சச் சக்கிரத்தில் நீச்ச ராசியில் இல்லாமல் இருந்தாலுங்கூட

ராஜ யோகமானது இந்தக் கலியுகத்தில் நடை பெறுது என்று கர்க்கியர் என்ற கர்க மகரிஷி கூறி இருப்பதாக இந்தச் சந்திர கலா நாடியிற் சொல்லி இருக்கின்றது. இதில் சந்திரன் நீச்சக் கிரத்துடனும் உச்சக் கிரகத்துடனும் கூடி இருந்தால் ஜாதகன் ராஜ யோகம் அடைவார்.

ஜெனன காலத்தில் ராசிச் சக்கரத்தில் கிரகங்கள் உச்ச ராசியிலிருந்தாலும், அம்சச் சக்கிரத்தில் நீச்ச ராசியிலிருந்தால் ஜாதகருக்கு ராஜயோகம் நிஷ்பலனுக போய்விடும், யோக முண்டாகாது.

ஜெனன காலத்தில் ராசிச் சக்கிரத்தில் கிரகங்கள் உச்ச ராசியில் நீச்ச ராசியில் இருந்து ராஜயோகம் உண்டானுலுங்கூட நவாம்சச் சக்கிரத்தில் நீச்ச ராசியில் இருந்தால் ஜாதகர் தரித்திரம் அடைவார்.

(233) ஜாதகருக்கு மைத்துனன் ஸ்தானம் என்பது ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவம் ஆகும். இந்த மைத்துனன் மனைவியின் கூடப் பிறந்தவர் ஆவார்.

(234) ஜாதகருக்கு இரண்டாவது தார ஸ்தானம் என்பது ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாவது பாவம் ஆகும்.

(235) ஜென்ம லக்கினத்திற்காவது, ஜென்மராசி என்ற சந்திர லக்கினத்திற்காவது சனி கோச்சாரத்தில் பன்னிரண்டு பாவங்களில் சஞ்சாரஞ் செய்யும் காலத்தில் முறையே (1) விபத்து, (2) ஹானி, (3) சம்பத்து, (4) வயிற்று ரோகம், (5) மகாபயம், (6)

சத்துரு க்ஷயம், (7) மகாதைரியம், (8) மரணம், (9) தேகம் இளைத்தல், (10) பீடை, (11) லாபம், (12) நஷ்டம் ஆகிய இப்பலன்கள் ஜாதகருக்கு உண்டாகும்.

கோச்சார சனி சஞ்சாரஞ் செய்யும்

| பாவ எண் | அதன் பலன் |
|---|---|
| 1-ல் | விபத்து |
| 2-ல் | ஹானி |
| 3-ல் | சம்பத்து |
| 4-ல் | வயிற்று ரோகம் |
| 5-ல் | மகா பயம் |
| 6-ல் | சத்துரு க்ஷயம் |
| 7-ல் | மகா தைரியம் |
| 8-ல் | மரணம் |
| 9-ல் | தேகம் இளைத்தல், |
| 10-ல் | பீடை |
| 11-ல் | லாபம் |
| 12-ல் | நஷ்டம் |

(237) ஜென்ம லக்கினாதிபதி தன் உச்ச ராசியிலிருந்தாலும், லக்கின ஆரூடம் சுபருடைய ராசியில் இருந்தாலும் லக்கினாதிபதி சுபருடன் கூடினாலும், ஜாதகர் தேஜசு உடையவர், அறிவாளி, தீரர், சுயகாரியத்தில் நிபுணர் ஆவார்.

(238) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாம் பாவாதிபதி பதினோராம் பாவத்திலிருந்து மூன்றாம் பாவத்தில் சனி இருந்தால் இந்தப் பதினோராம் பாவத்தில் சனி

கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதக ருடைய புத்திரிக்கு விவாகம் உண்டாகும்.

(239) ஜென்ம லக்கினத்திற்கு மூன்ரும் பாவாதி பதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசிக் குரிய மாதத்திலாவது, அல்லது இந்த நவாம்ச ராசிக்குத் திரிகோண ராசிகளில் எந்த ராசியை இராசிச் சக்கிரத் தில் மூன்ரும் பாவாதிபதி பார்க்கின்ருரோ அந்த ராசிக்குரிய மாதத்திலாவது ஜாதகருடைய புத்திரிக்கு விவாகம் நடக்கும்.

(240) ஜென்ம லக்கினத்திலிருந்து எந்த பாவத் திற்கு எட்டாம் பாவத்தில் சனி இருக்கின்ருரோ அல்லது ஜென்ம லக்கினத்திலிருந்து எந்த பாவத் திற்கு எட்டாம் பாவத்தைச் சனி பார்க்கின்ருரோ அந்தப் பாவத்திற்கும் அதன் எட்டாம் பாவத்திற்கும் நாசம் உண்டாகும்.

(241) எந்தக் கிரகமாய் இருந்த போதிலும் அந்தக் கிரகம் ஜென்ம லக்கினத்திலிருந்து எந்தப் பாவத்தில் இருக்கின்றதோ அந்தப் பாவத்திற்குப் பத்தாவது பாவத்தில் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது அந்தக் கிரகம் (அந்தப் பாவத்திற்கு) சுபத்தையே கொடுப்பார்.

(242) ஜென்ம லக்கினத்திற்கு எட்டு, பன்னிரண்டு ஒன்று இந்தப் பாவங்களில் குரூரக் கிரகங்கள் இருந் தாலும், அதிக பாபராகிய சனி இருந்தாலும் அந்தக் கிரகத்தின் தெசையில் கஷ்டம் உண்டாகும், கஷ்டம், நிவர்த்தியாகச் சாந்தி செய்யவும்

(243) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியில்

குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யுங் காலத்தில் ஜாதகருக்குச் சுபமும், உத்தியோகமும் தனமும் உண்டாகும்.

(244) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பதினோராவது பாவத்திற்குரிய கிரகங்கள் நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசியில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகர் விசேஷ தனலாபம் அடைவார்

(245) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு பதினொன்று இந்தப் பாவாதிபதிகள் நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரிகோண ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருடைய தாயாதி வர்க்கத்தில் அதிக விபத்தும், மனைவி வர்க்கத்தில் நாசமும், பிரபல தாயாதி நாசமும் ஏற்படும்.

(246) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்று, ஒன்பது, பன்னிரண்டு ஆகிய இந்தப் பாவங்களில் குரு கோச்சார காலத்தில் வந்திருக்கும்போது புதனாவது சந்திரனாவது அவ்விடத்திற்கு வரும்போது ஜாதகர் புண்ணிய தீர்த்த யாத்திரை செய்வார், தேவதா தரிசனையும் தேவப்பிராம்மண பூஜையும் செய்வார், இவைகளை அந்தந்தக் கால பலனைக் கொண்டு ஊகிக்கவும்.

(247) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி சுவ க்ஷேத்திரத்தில் இருந்தால் அவர் தெசையில் ஜாதகர் சுகம் அடைவார், நூதன கிருக நிர்மாணஞ் செய்வார், அதிக தன தான்யம் அடைவார். இந்த நான்காம் பாவாதிபதி பாபக் கிரகத்தின் அம்சத்தில் இருந்தாலும், பாபர்களால் பார்க்கப்பட்டாலும் அவர்

தெசையில் குரூர கிரக காலத்தில் ஜாதகருக்கு ராஜ உபத்திரவம் உண்டாகும்.

(248) ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாம் பாவாதி பதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரி கோண ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய சகோதர சகோதரி நாசம் ஏற்படும், இதற்கு முந்தி சிற்றப்பன் புத்திரர் புத்திரிக்கு நோயும், தாயாதி துக்கமும் அசுபமும், சகோதரக்கிலேசத்தால் மாதுரு பீடையும் உண்டாகும்.

(249) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதி பதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசியின் திரி கோண ராசிகளிலாவது அல்லது பதினோராம் பாவாதி பதி பார்க்கும் ராசிகளிலாவது ஜாதகருடைய மருமக னுடைய ஜென்ம ராசியும் ஜென்ம நக்ஷத்திரமும் இருக்கும்.

(250) ஜென்ம லக்கினத்திற்கு நான்கு, எட்டு ஒன்று ஆகிய இப் பாவாதிபதிகளின் ஸ்புட ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருக்கு அதிக சௌக்கியமும் தனவரவு முண்டு.

(251) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, பதி னொன்று ஒன்று ஆகிய இந்தப் பாவங்களில் பாபரிருந் தால், அந்த ராசிகளில் குரு கோச்சாரத்தில் சஞ்சரிக் கும்போது ஜாதகருக்கு லாபமும் தன தான்யமும் உண்டாகும், இந்தப் பாவங்களுக்குச் சுபர் பார்வை இருந்தாலும் இந்தப் பலன்களே உண்டாகும்.

(252) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, ஐந்து, நான்கு ஆகிய இந்தப் பாவாதிபதிகளின் ஸ்புட ராசி யில் குரு முதலிய மேற்படி சுபர்கள் கோச்சாரத்தில்

வரும்போது ஜாதகருக்குத் தனம் தானியம், பசு முதலானவை ஹானியாகும்.

(253) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்து, பன்னிரண்டு ஒன்று இந்தப் பாவாதிபதிகளின் ஸ்புடத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது, இந்தப் பாவத்திற்குப் பத்தாம் பாவாதிபதி இந்தப்பாவத்தைப் பார்த்தால் அக்காலத்தில் ஜாதகருக்குத் தொழில் சித்தி ஆகும்.

(254) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு பத்து, பதினொன்று இந்தப் பாவாதிபதிகள் இருக்கும் ராசியைக் கோச்சாரத்தில் குரு பார்க்கும்போது அல்லது அடையும்போது ஜாதகருக்கு ஸ்திரீ லாபம் அல்லது ஸ்திரீ போகம் இவைகள் கிடைக்கும்.

(254) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, பத்து, பதினொன்று இந்தப் பாவாதிபதிகளி னுடைய ஸ்புடத்தின் ராசியில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது இந்தப் பாவங்கள் அல்லது குரு சந்திரனல் பார்க்கப்பட்டால் ஜாதகருக்கு விசேஷ திரவிய லாபமுண்டாகும்.

(255) ஜென்மலக்கினத்திற்கு நான்கு இரண்டு, பதினொன்று இந்தப் பாவாதிபதிகளினுடைய ஸ்புடத்திற்குரிய ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குப் பூமி லாபம், ஸ்திரீ லாபம் அல்லது பல்லக்கு முதலிய வாகனங்கள் உண்டாகும்.

(256) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, ஒன்பது, பன்னிரண்டு இந்தப் பாவாதிபதிகளி னுடைய ஸ்புடத்திற் குரிய ராசியில் சனி கோச்சாரத்தில்

சஞ்சாரஞ் செய்யும் போது இந்தப் பாவங்கள் அல்லது சனி கேதுவால் பார்க்கப் பட்டால் ஜாதகருக்குத் தனஹானி, மிக்கதுக்கம் இவைகள் உண்டாகும்.

(257) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்து பன்னிரண்டு, ஒன்று இந்தப் பாவாதிபதிகளி னுடைய ஸ்புடத்திற் குரிய ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது இந்தப் பாவங்களை அல்லது சனியைக் கேது பார்த்தால் ஜாதகருக்குப் புத்திர ஹானி ஏற்படும்.

(258) ஜென்ம லக்கினத்திற்கு மூன்று, பன்னிரண்டு ஒன்று இந்தப் பாவாதிபதிகளி னுடைய ஸ்புடத்திற் குரிய ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது கேது இந்தப் பாவங்களை அல்லது சனியைப் பார்த்தால் ஜாதகருக்குச் சகோதர நாசம் உண்டாகும்.

(259) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டு, ஏழு பன்னிரண்டு இந்தப் பாவாதிபதிகளி னுடைய ஸ்புடத்திற் குரிய ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது இந்தப் பாவங்களை அல்லது சனியைக் கேது பார்த்தால் ஜாதகருக்குத் தனநாசமும் மிக்க துக்கமும் ஏற்படும்.

(260) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்து, பன்னிரண்டு, ஒன்று இந்தப் பாவாதிபதிகளின் ஸ்புட ராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது இந்தப் பாவங்களை அல்லது சனியைக் கேதுபார்த்தால் ஜாதகருக்குப் புத்திர ஹானியும், ராகு சனி கூடினால் மனைவி நாசமும் ஏற்படும்.

(261) ஜென்ம லக்கினத்திற்கு இரண்டாவது பாவம், சனி, சந்திரலக்கினம், சுக்கிரன் இவர்களுடைய ஸ்புட ராசியில் கோச்சாரத்தில் சுக்கிரன் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்கு ஸ்திரீ லாப முண்டாகும்.

(262) ஜென்ம லக்கினத்திற்குப் பத்து, பதினொன்று, ஒன்று இப்பாவாதிபதிகளுடைய ஸ்புடங்களுக்குரிய ராசிகளில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது இப்பாவங்களை அல்லது குருவைச் சந்திரனாவது புதனாவது பார்த்தால் ஜாதகருக்குத் தீர்த்த யாத்திரை உண்டாகும்.

(263) ஜென்ம லக்கினத்திற்கு மூன்று, பன்னிரண்டு இந்தப் பாவாதிபதிகளின் ஸ்புடத்திற் குரிய ராசிகளில் ராகு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ராகு அல்லது இப்பாவங்கள் குருவால் பார்க்பட்டால் ஜாதகருக்குச் சகோதர நாசமும் மகாரோகமும் உண்டாகும்.

(264) ஜென்ன ஜாதகத்தில் அங்காரகன், சனி, ராகு இவர்களின் ஸ்புடத்திற்குரிய ராசியில் கோச்சாரத்தில் ராகு சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்கு மகா ரோகமும் மனஸ்தாபமும் உண்டாகும்.

(265) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாவது பாவத்தில் செவ்வாய் சனி, ராகு இவர்கள் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்கு மகாரோகம், மனஸ்தாபம் இவைகள் உண்டர்கும்.

(266) ஜென்ம லக்கினத்திற்கு ஐந்து, பன்னிரண்டு இந்தப் பாவாதிபதிகளின் ஸ்புடத்திற்குரிய ராசிகளில் அங்காரகன் சஞ்சாரஞ் செய்யும் போது ஆறும் பாவாதிபதியால் இந்தப் பாவங்கள் அல்லது

அங்காரகன் பார்க்கப் பட்டால் ஜாதகருக்குப் புத்திர புத்திரி நாசமும் கஷ்டமும் உண்டாகும்.

(267) ஜென்ம லக்கினத்திற்குப் பதிேனாராம் பாவாதிபதி, குரு, லக்கினம் இவைகளின் ஸ்புடத்திற் குரிய ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சரிக்கும் போது ஜாதகருக்குத் தன லாபம் உண்டாகும்.

(268) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி குரு, லக்கினம் இவைகளின் திரிகோண ராசிகளில் சந்திரன் இருந்து குரு, சுக்கிரன் இவர்களால் பார்க்கப் பட்டாலும், இந்தப் பதினோராம் பாவாதிபதி, குரு லக்கினம் இவைகளின் புடத்திற் குரிய ராசியில் கோச்சாரத்தில் கேது சஞ்சாரஞ் செய்யும் போது சனி கூடினாலும் ஜாதகருக்குக் கர்மஹானி, மனக்கிலேசம், கெண்டம், மரணம் இவைகள் உண்டாகும்

(269) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவாதிபதி, குரு, லக்கினம் இவர்களுக்குப் பத்தாம் பாவாதிபதிகளை ராகு பார்த்து இந்தப் பதினோராம் பாவாதிபதி, குரு, லக்கினம் இவைகளின் ஸ்புடத்திற்குரிய ராசியில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும் போது, ராகு சனியைப் பார்த்தால் ஜாதகருக்குக் கர்மஹானி, மனக்கிலேசம். கெண்டம். மரணம் இவைகள் உண்டாகும்.

(270) ஜென்ம லக்கினத்திற்குப் பதினோராம் பாவம், குரு, லக்கினம் இவைகளின் பாக்கியாதிபதிகளினுடைய ஸ்புடத்திற்குரிய ராசிகளில் ராகு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குப் பாக்கிய நாசமுண்டாகும்.

(271) ஜென்ம லக்கினத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டு இந்தப் பாவாதிபதிகளின் ஸ்புடராசியில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது இரவில் பிறந்த ஜாதகருக்கு கெண்டம் மரணம் முதலியவை ஏற்படும், பகலில் பிறந்த ஜாதகருக்கு மேலே சொல்லப்பட்ட ராசிகளுக்கு ஏழாவது ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குக் கெண்டம், மரணம் முதலியவை ஏற்படும்.

(272) சனி, மாந்தி, ராகு, இவர்கள் ஜெனன ஜாதகத்தில் கூடியிருந்தால், இவர்களின் ஸ்புடத்திற்குரிய ராசிகளில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதருக்குக் கெண்டம் மரணம் முதலியவை உண்டாகும்.

அல்லது செவ்வாய் ராகு இவர்கள் ஜெனன ஜாதகத்தில் கூடியிருந்தால் இவர்களின் ஸ்புடத்திற்குரிய ராசிகளில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்குக் கெண்டம் மரணம் முதலியவை நேரும்.

(273) ஜென்ம லக்கினம், சந்திரன், சூரியன், ஆகிய இவைகளின் ஸ்புடத்தில் (அதாவது ஸ்புடத்திற்குரிய ராசிகளில்) சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருடைய மாதுருக்குக் கெண்டம், மரணம் முதலியவை நேரும்.

(274) ஜென்ம லக்கினம், சந்திரன், சூரியன் இவர்களுக்குப் பாக்கியாதிபதிகளின் ஸ்புடத்திற்குரிய ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போதும்,

அல்லது லக்கினம், சந்திரன், சூரியன் இவர்களின் ஸ்புடத்திற் குரிய ராசிகளில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போதும்

ஜாதகருடைய தகப்பனுருக்கு நாசம், கெண்டம், மரணம் முதலியவை நேரிடும்.

(275) ஜென்ம லக்கினம், சந்திரன், சூரியன் இவர்களுக்கு ஐந்தாவது பாவத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரம் செய்யும் போது ஜாதகருடைய சந்ததிகளுக்கு நாசமும், கெண்டமும், மரணமும் உண்டாகும்.

(276) ஜென்ம லக்கினம், சந்திரன், சூரியன் இவர்களுடைய ஸ்புடத்தின் ராசியில் சுக்கிரன் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருக்குச் சுக மூண்டாகும்.

(277) ஜென்ம லக்கினம், சந்திரன் சூரியன் இவர்களுடைய ஸ்புடத்தின் ராசியில் செவ்வாய் கோச்சாரத்தில் சஞ்சரிக்கும்போது ஜாதகருக்குப் பூமி லாப மூண்டாகும்.

(278) ஜென்ம லக்கினம் சந்திரன், சூரியன், இவர்களுக்கு ஆருவது பாவாதிபதிகளின் ஸ்புடத்திற்குரிய ராசிகளில் ராகு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்கு ஆயுத பீடை உண்டாகும்; லக்கினம், சந்திரன், சூரியன் இவர்களுடைய ஸ்திதியையும் அறிந்து சொல்லவும்.

(279) ஜென்மலக்கினம், சந்திரன் சூரியன் இவர்களுக்குத் தனுதிபதியின் (இரண்டாவது பாவாதிபதியின்) ஸ்புடத்திற்குரிய ராசிகளில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குத் தன விசேஷமாதல் உண்டாகும். இதற்குக் குரு, சந்திரன்

சூரியன் இவர்களுடைய ஸ்திதியை அறிந்து சொல்ல வும்.

(280) ஜென்ம லக்கினம், சந்திரன் சூரியன் இவர்களுக்கு ஐந்தாவது பாவாதிபதிகளின் ஸ்புடத்திற்குரிய ராசிகளில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு வித்தியாலாபம் உண்டாகும்.

மேலும் சந்திரன், புதன், சூரியன் இவர்களுடைய ராஜ்யஸ்தானாதிபதிகளின் (பத்தாம் பாவாதிபதிகளின்) ஸ்புடத்திற்குரிய ராசிகளிலும், லக்கினம், சந்திரன், குரு இவர்களுடைய ஸ்புட ராசிகளிலும் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு ராஜ பூஜ்யத்தை உண்டுபண்ணும்.

(282) ஜென்ம லக்கினம் சந்திரன், சூரியன் இவர்களுக்குப் பன்னிரண்டாவது பாவாதிபதிகளின் ஸ்புடத்திற் குரிய ராசிகளிலும், செவ்வாய், சனி, லக்கினம் இவைகளின் ஸ்புட ராசிகளிலும் அங்காரகன் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குக் கட்கம் என்ற வாள், கத்தியால் பாதை உண்டாகும்.

(283) ஜென்ம லக்கினம் சந்திரன், சூரியன் இவர்களுக்குப் பத்தாம் பாவாதிபதிகளின் ஸ்புடத்திற்குரிய ராசிகளிலும், லக்கினம், சந்திரன் சூரியன் இவர்களுடைய ஸ்புட ராசிகளிலும் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ்செய்யும்போது ஜாதகருக்கு வியாதியும், பிரமையும் உண்டாகும்.

(284) ஜென்மலக்கினம் சந்திரன், சூரியன் இவர்களுக்கு லாபாதிபதிகளுடைய ஸ்புடத்திற்குரிய ராசிகளிலும், சுக்கிரன், குரு, சூரியன் இவர்களுடைய

ஸ்புடத்திற்குரிய ராசிகளிலும் சந்திரன் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குத் தனப் பிராப்தி உண்டாகும்.

(285) ஜென்மலக்கினம், சந்திரன், சூரியன் இவர்களுக்கு ஒன்பது, பத்து, பதினோராம் பாவாதிபதிகளினுடைய ஸ்புடத்திற்குரிய ராசிகளில் சந்திரன் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது சந்திரனுக்குப் பாபர் திருஷ்டி இல்லாமல் இருந்தால் ஜாதகருக்கு மனோபீஷ்ட சித்தி உண்டாகும்,

குறிப்பு :—அயிட்டம் 250 முதல் அயிட்டம் 285 வரையிலுமுள்ளவைகள் தேவகேரளிய பராசர கிருத பாவபலம் நாம பிரதமோத்யாயம் பிரகாரம் என்று இந்தச் சந்திர கலா நாடியிற் சொல்லி இருக்கிறது.

(286) ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் பாவாதிபதி பதினோராம் பாவத்தில் இருந்து ஒன்பது, பத்து இந்தப் பாவாதிபதிகளுடன் கூடியிருந்தால் ஜாதகர் பசு பூமி, தான்யம் முதலியனவும், பாக்கியமும் விருத்தியுடையவ ராவார், ஜாதகர் விசாலமான பெரிய வீடு லாபமுடையவர், ஒன்பதாம் பாவாதிபதி நீச்சமாய் இருந்தால் இந்த வீடு கிடைப்பதற்கு முந்தி ஜாதகர் வெகு வீடுகளில் வசிப்பார், இந்த வீடுகள் பிறருடைய வீடுகளாகும்.

(287) ஜென்மலக்கின ஆரூடத்தில் ராகு இருந்தால் அதன் காரணமாக யோகம் குறையும்,பெரியவதையும் உண்டாகும்.

(288) ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் பாவத்தில் அசுபக்கிரகம் இருந்தால் ஜாதகர் கர்த்தரி

யோகத்தை அடைவார், குரூரச் செய்கை உடையவர், சமர்த்தர், பந்து ஜனபீடை உடையவர்.

(289) கேசரி யோகத்தில் பிறந்தவருக்குச் சந்திரன் ஜென்ம லக்கினத்திற்கு நான்கில் இருந்தால் (அதாவது ஜென்ம லக்கினத்திற்கு நாலுகில் சந்திரன் இருந்து, சந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருந்தால்) ஜாதகர் தியாக முடையவர், மத்ஸிய, யவ, அங்குசாதிக ளுடைய அடை ரேகைக ளுடையவர், மேற்படி ரேகைகளைக் கைகளி லுடையவர், தேவப் பிராம்மண சாதுக்களைப் பூஜிப்பவர், அவர்களைச் சந்தோஷிப்பவர், சுய அடையாளங்க ளுடையவர், சவுந்தரிய முடைய மனைவி, புத்திரர் இவர்களை யுடையவர், சேனதிபதி யாவார், சுகீ, திருடமான அங்கங்களுடையவர், ரஸிகர், கைகளால் பிரதாபர், சர்வம் அறிந்தவர், ரசமான மனதுடையவர், போக ரசம் அறிந்தவர் ஆவார்.

(290) ஜென்ம லக்கினம், தனுசாகி வேசிம ஸ்தானமாகிய நான்காம் பாவத்தில் இரண்டு பாபக்கிரகங்கள் இருந்தால் ஜாதகர் மகா ஐஸ்வரிய முடையவர், அகண்ட சாம்ராஜ்ய யோக முடையவர்,

(291) ஜென்ம லக்கினம் தனுசாகிப் பத்தாம் பாவாதிபதி சந்திரனுடைய பிள்ளையாகிய புதனுடைய வீட்டில் தன் உச்சாம்சத்தில் அல்லது மித்திராம்சத்தில் இருந்தால் ஜாதகர் வியாபாரத்தினுல் ஜீவிப்பார், ராஜகாரிய வல்லபராவார், பிராம்மணுல் ராஜபூஜிதனுவார், சகல குணங்களு முடையவராவார், வைசியர் மூலமாக அதிகதனம் அடைவார்.

(292) ஜென்ம லக்கினத்திற்கு ஒன்பதாவது பாவம் பிதுருபாவம், இதற்கு ஒன்பதாவது பாவம் பிதுருக்குக் குரு ஸ்தானம். இந்தக் குரு ஸ்தானத்தில் (அதாவது லக்கினத்திற்கு ஐந்தாவது பாவத்தில்) ராகு அல்லது கேது இருந்தால் ஜாதகருடைய தகப்பன் இரண்டு குருவுடையவ ராவார், வேதாந்த சாஸ்திர தத்துவம் அடைவார், தீரர், சிவபுராண மறிந்தவர், சிறிய தகப்பனின் புத்திரனும் ஞானவானவார்.

(293) ஜென்ம லக்கினம் கடகமானல் பதினோராம் பாவாதிபதி யாகிய சுக்கிரன் தன்னுடைய அஷ்டவர்க்கத்தில் தான் இருக்கும் ராசியில் எத்தனை பரல்களுடன் இருக்கின்றாரோ அத்தனை பேர் ஜாதகருக்குச் சிற்றப்பன்மார்கள் திர்க்காயு ளுடையவர்களாய் இருப்பார்.

(294) ஜென்ம லக்கினம் கடகம் ஆகி மூத்த சகோதரஸ்தான ஆருடாதிபதி குருவால் பார்க்கப் பட்டால் ஜாதகருடைய மூத்த சகோதரன் திரவிய சம்பாதனையில் சமர்த்தர் ஆவார்.

(295) ஜென்ம லக்கினத்தின் ஆரூடராசியில் சுக்கிரன் இருந்து ஒன்பதாம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டால் ஜாதகர் ரகசியத்தில் காம முடையவராகி ரகசியத்தில் ரகசிய ஸ்திரீயின் தனத்தை அடைவார்.

(296) ஜென்ம லக்கினத்திற்கு எட்டாவது பாவாதிபதி நவாம்சச் சக்கிரத்தில் இருக்கும் ராசிக்குத் திரிகோணத்தில் சனி கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருடைய பிதாமகனுக்கு கெண்டம், மரணம் நேரிடும்.

## அமலா யோகம்

